விலை ரூபா: 5.00
பக்கங்கள்:- 10
Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 09 | புதன்கிழமை (25.09.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 280

# அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் விடுதலைப்புலிகளை காக்க வைத்த படையினர்

## ஒப்பந்த மீறல் என கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் பாப்பா மற்றும் போராளிகள் குழுவினர் நேற்றுப் பிற்பகல் தீவகத்துக்கு சென்றபோது அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த கடற்படையினர் அவர்களைச் சோதனைச் சாவடியில் நீண்ட நேரம் காக்க வைத்து பயணத்தைத் தொடர அனுமதிக்காது திட்டமிட்டுத் தடுத்து நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போராளிகளைச் சீண்டிப்பார்த்து அவர்களை வலுக்கட்டாயமாக சண்டைக்குத் தூண்டும் கடற்படையினரின் அலட்சியப் போக்கினால் நீண்ட நேரம் காத்து நின்ற போராளிகள் அவ்வீதியால் ஏனைய வாகனங்களைச் செல்வதற்கு கடற்படையினர் அனுமதித்தபோது அவற்றோடு சேர்ந்து தாமும் தீவகத்திற்குச் சென்றனர்.

தீவகத்தில் தியாகி திலீபனின் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் மீண்டும் விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த போது

(10ம் பக்கம் பார்க்க)



அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் காத்து நிற்கும் புலிகள்

## இராணுவம் பலத்த பாதுகாப்பு வழங்க

# கிழக்கிலிருந்து தரைமார்க்கமாக

# 283 புலிகள் வன்னி சென்றனர்!

ஏ-9 கண்டி வீதி

## 24 மணி நேரப் பயணத்திற்கு இன்று அனுமதியில்லை

(திருநெல்வேலி)

ஏ-9 யாழ் கண்டிவீதியை 24மணி நேரப் போக்குவரத்துச் சேவைக்கு இன்று திறந்து விடவேண்டாம் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ அவசர அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளதாக முகமாலைச் சோதனைச் சாவடியில் உள்ள இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

24மணி நேரமும் ஏ-9 வீதி போக்குவரத்திற்காகத் திறக்கப்படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்குடன் அரசு, புலிகள், ஐ.சி.ஆர்.சி ஆகிய முத்தரப்பும் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்துவது என்றும்,

(10ம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை மக்கள் கையசைத்து ஆரவாரம்

(மட்டக்களப்பிலிருந்து விஷேட நிருபர்)

**மட்டக்களப்பிலிருந்து 283 தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் நேற்று முதற்தடவையாக தென்னிலங்கை ஊடாக வாகனத் தொடரணி மூலம் வன்னிக்குச் சென்றுள்ளனர்.**

**இராணுவப் பாதுகாப்புடன் தரை வழி மார்க்கமாக வன்னி சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தென்னிலங்கைப் பெரும்பான்மை மக்கள் கை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.**

செங்கலடி பதுளை வீதி ஏ-5 நெடுஞ்சாலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான இலுப்பட்டிச் சேனையிலிருந்து நேற்றுக்காலை 7.30 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களை கொடுவாமலைப் பாலத்தில் தயார் நிலையில் இருந்த இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வரவேற்றனர்.

சிவில் உடை தரித்த விடுதலைப்புலிகளை ஏற்றிச்சென்ற வாகனத்தொடரணிக்கு முன்னே இராணுவக் கவச வாகனமும், கண்காணிப்புக் குழுவினர் வாகனமும் செல்ல அதற்கிடையில் விடுதலைப்புலிகளை ஏற்றிச் சென்ற 7வாகனங்களும் செல்ல இவற்றின் பின்னால் கண்காணிப்புக் குழுவினர் வாகனமும் இராணுவக் கவச வாகனமும் சென்றது.

மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட விடுதலைப்புலிகளின் வாகனத் தொடரணியானது பொலநறுவை, கபறணைச் சந்தி, மருதலைகடவைச சந்தி, மிகிந்தலை வீதியூடாக வவுனியாவைச் சென்றடைந்தது.

பொலநறுவை மாவட்டம், அநுராதபுரமாவட்டம் ஊடாக பயணஞ் செய்த விடுதலைப்புலி உறுப்பினர்

(10ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கடற்படை முகாம் எதுவித உண்மையும் இல்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடற்படையினர் முகாம் அமைப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டில் எந்தவிதமான உண்மையும் இல்லை. கடற்படையினரின் அனுசரணையுடன் பொலிஸ் நிலையம் ஒன்றே அங்கு அமைக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு கடற்படையினர் உதவி செய்து வருவதால் அதனை விடுதலைப்புலிகள் கடற்படை முகாம் அமைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ளனர். இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (ம)

## தலைவர் பிரபாகரனுடன் சந்திரசேகரன் சந்திப்பு

(வவுனியா)

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் இடம் பெற்ற இச்சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன் போது வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்

(10ம் பக்கம் பார்க்க)

## ஒரு புறத்தில் சமாதான முயற்சி மறுபுறத்தில் ஆயுதக் கொள்வனவு

### அரசின் இருவேடம் குறித்து அதிருப்தி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, மறுபுறத்தில் இராணுவத்திற்கு நவீன யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்த தளபாடக்கொள்வனவில் ஸ்ரீலங்கா விமானப்படையினருக்கு வேண்டிய தாக்குதல் ஹெலிகளும், படையினரின் போக்குவரத்திற்குரிய விமானங்கள் மற்றும் யுத்த தளபாடங்களையும் அரசு கொள்வனவு செய்வதில் தீவிரம் காட்டிவருகிறது.

இதேவேளை கடற்படையினருக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## சட்ட திருத்தத்திற்கு எதிராக 15 மனுத்தாக்கல்

(கொழும்பு)

18,19வது அரசியலமைப்புத்திருத்தத்திற்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று 9மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டமூலங்களுக்கு எதிராக நேற்றுவரை 15மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## நெடுந்தீவில் கடற்படை முகாம் அமைப்பது கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் அம்முயற்சியைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் நெடுந்தீவில் பாரிய முகாம் அமைக்கின்றனர் என்று விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனை அடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஆன்செண்டர் தலைமையிலான குழுவினர் நேற்று நெடுந்தீவிற்கு விஜயம் செய்து நிலைமையை அவதா

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம


### தேவை

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும் உடனே நேரில் வரவும். ப. சிவானந்தசர்மா சந்தசாமி கோவில் வீதி, இணுவில், சுன்னாகம்.

(5931)

### புதிய சம்ஸ்கிருதநூல்

லகு ஸ்ரீசக்ரபூஜை விளக்கப் படங்களுடன் வெளிவந்து விட்டது, தொடர்புகளுக்கு ப. சிவானந்தசர்மா சந்தசாமி கோவில் வீதி, இணுவில்.

(5932)

### வாடகைக்கு

புதிய இல. 244 கே.கே.எஸ் வீதியில் சுருக்குகதவு பிளேட் போட்ட சட்டடம் வாடகைக்கு உண்டு தொடர்பு- 201, K.K S. வீதி யாழ்ப்பாணம்.

(கி-5028)


# எஸ். பியை திருப்பி அனுப்பிய இராணுவ அதிகாரி மீது நீதிமன்றம் விசாரணை

(வவுனியா)

வவுனியாவில் கோதண்டம் நொச்சிக்குளம் பகுதிகளில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக பார்வையிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் சென்ற குழுவினரைத் திருப்பியனுப்பிய கேணல்தர இராணுவ அதிகாரி இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தம்மை இராணுவ அதிகாரி திருப்பி அனுப்பியமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்குமுறைப்பாடு செய்ததமையை அடுத்தே இந்த இராணுவ அதிகாரி இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்ல உடன் விசாரணை நடத்தி 24 மணி நேரத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு படை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ம)

## பெருந்தோட்டங்கள் தனியார் மயமாகாது

(கொழும்பு)

நாட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டங்களை தனியாருக்கு விற்க தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

நாட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டங்களை தனியாருக்கு வழங்குவதை விட தோட்டத் தொழிலாளரிடையே பகிர்ந்தளிப்பதே சிறந்த தீர்வாகும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## மரத்தால் விழுந்து காயம்

(மந்திகை)

நாவல் பழம் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறியவேளை மரக்கிளை முறிந்து கீழே விழுந்ததில் காயமடைந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வரணியைச் சேர்ந்த பி. பாலரூபன் (வயது18) என்ற இளைஞனே காயமடைந்தவராவர்.

(ந 5,23)

## மின்கம்பத்துடன் மோதுண்டு காயம்

(மந்திகை)

இரவுவேளை வெளிச்சமின்றி சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் மின்கம்பத்துடன் மோதியதால் காயமடைந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுப்பிட்டியைச்சேர்ந்த எஸ். தயூர்வராஜா (வயது23) என்பவரே காயமடைந்தவராவார் இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ந-5,23)

## இளைஞர்குழு நடவடிக்கை:
# காதலியை கைவிட்ட காளை மீண்டும் இணைந்தார்!

(மந்திகை)

காதலித்த யுவதியுடன் கூடிவாழ்ந்துவிட்டு பின்னர் அவளைக் கைவிட்டுச்சென்ற இளைஞனை வடமராட்சிப் பகுதியிலுள்ள கலாசாரத்தைக் கண்காணிக்கும் இளைஞர் குழுவினர் மீண்டும் யுவதியுடன் சேர்த்துவைத்தனர்.

இச்சம்பவம் பருத்தித்துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது சுன்னாகத்தைச் சேர்ந்த 22வயதான இளைஞர் வேலைக்காகச் சென்ற சமயத்தில் காதல் வசப்பட்டு பத்துதினங்களாக அப்பெண்ணுடன் கூடிவாழ்ந்துள்ளார்.

இதனை கேள்வியுற்ற இளைஞனின் தாய் அப்பெண்ணை கைவிட்டுவிட்டு வருமாறு கூறியுள்ளார். தாயின் சொல்லைத்தட்டாத தனயன் அவ்வாறே செய்துள்ளார்.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் கலாசாரத்தைப் பேணும்குழுவினருக்கு முறையிட்டதை அடுத்து இருவரையும் அவர்கள் சேர்த்து வைத்தனர் (த-23)

# தியாகி திலீபனின் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தியாகி லெப். கேணல். திலீபனின் 15ஆவது ஆண்டு நினைவுதின வைபவங்கள் நேற்றுமுதல் 26ந்திகதிவரை மூன்று இடங்களில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

24ந்திகதி நேற்று சிதம்பரபுரத்திலும், இன்று 25ந்திகதி செட்டிகுளத்திலும் 26ந் திகதி பூந்தோட்டத்திலும் தியாகி லெப். கேணல் திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளும் அடையாள உண்ணாவிரதநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளையும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளையும் அடுத்து வவுனியாமாவட்டம் எங்கும் சிவப்புமஞ்சள் கொடிகளாலும் பதாகைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

26ந்திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வையொட்டி நாளை வவுனியா நகரசபை மைதானத்தில் அடையாள உண்ணாவிரதமும் பிரமாண்டமான அஞ்சலிக் கூட்டமும் ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன.

(ம)

## தமிழீழ
# விடுதலைப்புலிகளுடன் வன்னிஎம்.பிகள்சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும் தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் வன்னிநாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான முக்கிய சந்திப்பொன்று நேற்றுநடைபெற்றது.

இச்சந்திப்பின் போது முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது,

இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியேற்றம், மக்களின் அடிப்படைத்தேவைகளை பூர்த்திசெய்தல், அபிவிருத்தி வேலைகளை இருசாராரும் இணைந்து மேற்கொள்வது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டுள்ளது இச்சந்திப்பின்போது மாதம் ஒருதடவை இருசாராரும் சந்தித்துப் பேசுவதென்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன் ராஜாகுகனேஸ்வரன் ஆகியோருடன் விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் நிர்வாகசேவையை சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

(ம)

# கசிப்புஒழிப்பு வேட்டையில் நாவாந்துறை இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் ஐந்துசந்தி, நாலுசந்தி, கிரிப்பிள்ளையார் கோவிலடி கொட்டடி காதி அபுபக்கர்வீதி ஆகியபகுதியில் நேற்றுமாலை நாவாந்துறை இளைஞர் ஒன்றியம் மேற்கொண்ட திடீர்கசிப்பு ஒழிப்பு வேட்டையினால் பெருமளவுகசிப்பு கைப்பற்றப் பட்டது.

25ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் சமூகசீர்திருத்தத்தை ஏற்படுத்தும் வகையில் முன்னோடிசெயற்பாடாக மேற்படி பகுதிகளில் உள்ள கசிப்புஉற்பத்தி விற்பனையாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து பெரிய பெரிய பெரல்கள் மற்றும் போத்தல்களில் மறைத்து வைத்திருந்த சுமார் 50லீற்றருக்கு மேற்பட்டகசிப்பை கைப்பற்றியுள்ளனர்.

நாவாந்துறை இளைஞர் ஒன்றியத்தைச்சேர்ந்த பிரஸ்தாப இளைஞர்களின் முன்மாதிரி நடவடிக்கையை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டினர்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட கசிப்பு இன்று காலை நாவாந்துறைச்சந்தையில் வைத்து அழிக்கப்படுமென்றும் இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ)

## திருமலைக்கடலில் துருக்கிநாட்டுக் கப்பல் மூழ்கியது

(கொழும்பு)

திருகோணமலைக்கு 130 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடற்பகுதியில துருக்கி நாட்டுக்கப்பல் ஒன்று நேற்று முன்தினம் மூழ்கியுள்ளது.

கைடிடே என்ற இந்தக்கப்பல் மூழ்குமுன் அதிலிருந்து 18கப்பல சிப்பந்திகளும் இந்தியக்கப்பல் மாலுமிகளால் காப்பாற்றப் பட்டுள்ளனர்.

கப்பல மூழ்கியதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

(த)

## விளையாட்டு வீரர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

'விருதுகள் இரவு' சஞ்சிகைக்கான புகைப்படங்கள் இன்று எடுக்கப்படவுள்ளது இதற்காக கரப்பந்து கால்பந்து மற்றும் மெய்வன்மை அணிகளின் வீரர், வீராங்கனைகளையும்மற்றும்விளையாட்டுஅவை விளையாட்டு ஆலோசனைச் சபை அங்கத்தவர்களையும் இன்று பி.ப. 3 30 மணிக்கு பல்கலைக்கழக மைதான உடற்கல்வித்துறை அலகிற்கு சமுகம் தரும்படி விளையாட்டு அவைச்செயலாளர் எ. ஜி. சசிக்குமார்கேட்டுள்ளார்.

(இ-5)

## இன்று தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் தமிழ் மன்றத்தினர் நடத்தும் ''தமிழ் விழா'' இன்று காலை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம)

# பருத்தித்துறை சம்பவம் சந்தேகநபர்களுக்கு பிணை

(மந்திகை)

பருத்தித்துறை நகரில்உள்ள இராணுவமுகாம் சேதமாக்கபட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த மூன்று பேர் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 10ந் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஆறுமுகம் விக்னராசா, கடற்றொழிலாளர் இ. உதயலசீன் பொன்னுச்சாமி ஜெயரட்ணம் ஆகிய மூவருமே தலா ஐயாயிரம் ரூபா காசுப் பிணையிலும், பத்தாயிரம் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணையிலும் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூவரையும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நீதிமன்றில் ஆஜராகுவதுடன் பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்ளக்கூடாது எனவும் யாழ். குடாநாட்டுக்கு வெளியே செல்லக்கூடாது எனவும் நீதிபதி பிரேம் சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

(த-25)

## தாதியருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதிப்பரீட்சைக்குத் தோற்றிய எ-99 மாணவத் தாதிகளை யாழ. போதனா வைத்தியசாலைக்கு கடமைக்குச் சமுகமளிக்குமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கடமைக்கு சமுகமளிக்கும் போது தாதிய பயிற்சிப்பாடசாலை அதிபரின் விடுவித்தல் கடிதத்தை கொண்டுவரும் படியும் அவர்கள் கேட்கப் பட்டுள்ளனர். (இ-5)

# ஹாட்லி ஆசிரியர்கள் நேற்று பகிஷ்கரிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதி கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோர் கடத்திச் சென்று கடுமையாகத் தாக்கி மயானத்தில் அநாதரவாக விட்டுச்சென்ற சம்பவத்தைக் கண்டித்து கல்லூரி ஆசிரியர் மூகம் தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளிப் படுத்தும் வகையில் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கல்லூரிச் செயற் பாடுகள் அனைத்தும்முற்றாக ஸ்தம்பித்தது.

பாடசாலை இயங்காததால் அப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-23)

## கூட்டுறவு கல்லூரியில் இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் கனிஷ்ட தர பயிற்சிக்கான இறுதிப்பரீட்சை ஒக்ரோபர் மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாமல் யாழ்ப்பாணம் வந்துள்ள பயிற்சியாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவர்கள் உடனடியாக யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(இ-5)

## பாதிக்கப்பட்ட

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளுக்கு அவர்கள் ஆளாக வேண்டிய நிலைக்கும் உள்ளாகியிருக்கிறார்கள் எனவும் உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது (உ-8)

# இடைக்கால நிர்வாகசபை குறித்து இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை

## நியூயோர்க்கில் பிரதமர் பேட்டி

(கொழு'பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் வைத்து கொழும்பு தமிழ்ப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது;

இடைக்கால நிர்வாக சபை தேவையென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். அதனை எவ்வாறு உருவாக்கலாம் என நாங்கள் கலந்துரையாடுகிறோம்.

இதற்கு முன்பு, வடக்கு-கிழக்கில் 10 வருடங்களுக்கு இடைக்கால நிர்வாக சபையைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியும் ஆலோசனையை முன்வைத்திருந்தார் என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், முப்படைகளையும் தயாராகவே வைத்திருக்கிறோம் அதேபோல் படைகளை மீளமைப்புச் செய்ய வேண்டி இருக்கிறது படைகளில் நிலவுகின்ற குறைபாடுகளைக் கண்டுபிடித்து தற்போது அவற்றை நிவர்த்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

பல்வேறு நாடுகளிலும் உள்ள நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு எமது படைகளை மீளமைப்புச் செய்கின்றோம் என்று தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்துக் கூறுகையில்; சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிபெறாது என்று என்னால் நினைக்க முடியாது. எனினும், பிரச்சினை எழலாம். அவ்வாறு நடந்தால் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து அது தொடர்பான வாதப்பிரதிவாதங்களுக்குத் தீர்வு காண வேண்டி வரும் என்றார். (உ)

# வடக்கு- தெற்கு உறவை விளையாட்டு பலப்படுத்தும்

## ஆஸி. கிரி. பயிற்றுவிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு

வடபகுதி மக்களுக்கும்தென் பகுதி மக்களுக்கும இடையே மீண்டும்தொடர்புகளைவலுப்படுத்திக் கொள்வதில் விளையாட்டு முக்கிய பங்கைவகிக்க முடியும் என்றுஅவுஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ஜோன் ஹு'ச்சனான் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணகிரிக்கெட்வீரர்களுக்கான பயிற்சிகளைமுடித்துக் கொண்டு கொழும்பு சென்றபின் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதேஅவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும், புலிகளின் தலைவர் பிரபாகரனாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளை தொடர்ந்து, யாழ்ப்பாணத்து மக்கள் பெரும் விளையாட்டு அரங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஆவலாக உள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் டேவிட்வின்சனின் யோசனைக்கு அமைய கடந்த வெள்ளிக்கிழமை வடபகுதிக்கான விஜயமொன்றை மேற் கொண்ட பயிற்றுவிப்பாளர்கள் இங்கு சுமார் 50 விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஆயிரம் குடும்பங்களுக்கு உதவி

(தென்மராட்சி)

தென்னிந்தியத் திருச்சபையின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரியிலுள்ள தென்னிந்தியத் திருச்சபையின் தேவாலயத்தில் ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஆயர் அதி வணக்கத்துக் குரிய ஜே. ஜே. சமுவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-77)

# சமாதான ஆய்வுகூட நிகழ்வு 7 தினங்கள்

(தென்மராட்சி)

இலங்கை மன்றக்கல்லூரியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை சமாதான ஆய்வுகூட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், அநுராதபுரத்தில் இருந்து அழைத்துவரப்படும் மாணவர்களுக்கும் இடையில் சமாதானம், புரிந்துணர்வு அடிப்படையில், சமாதானக் கலாசாரத்தையும் தொடர்பாடலையும் மேம்படுத்துதல் பற்றி விரிவாக ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது.

இந்நிகழ்வில் இலங்கை மன்றக்கல்லூரியின் பணிப்பாளர் விஜய ஜயதிலகாவும் பங்குகொள்ளவுள்ளார் (உ-77)

# தியாகி திலீபனின் நினைவுகள்



## திலீபன் வாழ்வு சத்தியம்

அக்கினி தீண்டாத அற்புதம்
அசுரத்தைத் தீண்டிய சக்கரம்
முக்கனிச் சாற்றின் மந்திரம்
முளைத்திடும் யுகத்தின் இயந்திரம்

மக்கள் புரட்சியின் மௌனம்
மனுக்குல எழுச்சியின் யௌவனம்
முட்கள் களைந்த வித்துவம்
மோகம் கலைத்த தத்துவம்

திலீபன் வாழ்வு சத்தியம்
தேசம் கதைக்கும் நிச்சயம்
மலையைப் பிளந்த புத்தகம்
மலர்கள் வளர்க்கும் தினம் தினம்

உதிக்கும் சூரியன் திலீபன்
உரைக்கும் சொற்கள் கதைக்கும்
சிரிக்கும் விடுதலைக் கதிர்கள்
திரைகள் விலக்கும் நிச்சயம்

நல்லை அமிழ்தன்

# கடற்றொழில் விருத்திக்கு தனியான வங்கி

(கொழும்பு)

கடற்றொழிலை விருத்தி செய்து கொள்வதற்கு தனியான வங்கிஒன்றைஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாககடற்றொழில்கடல்வள அமைச்சர் மகிந்தவிஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் படகுகளை கொள்வனவுசெய்வதற்காகவும், மற்றும் தொழில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் கடன் அடிப்படையிலும், உதவி அடிப்படையிலும் தேவையான நிதியினை பெற்றுக் கொடுப்பதற்காகவே இவ்வங்கி அமைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# புலிகளின் பத்திரிகை படிப்பதில் சிங்கள மக்கள் மிகுந்த ஆர்வம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்கள மொழியில் வெளியிடும் 'தேதுன்ன' (வானவில்) பத்திரிகையை வாங்குவதில் சிங்கள மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

மேற்படி பத்திரிகையில் விடுதலைப் புலிகளின் போரியல் வரலாறுகள் மற்றும் அரசியல் ஆய்வுக் கூட்டுரைகள் இலங்கைத் தமிழர்களின் வரலாறு ஆகியன குறித்த விவரக் கட்டுரைகள் தகவல்கள் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

ஹாட்லிக் கல்லூரி அதிபர்

# தாக்கப்பட்டமை குறித்து இ.த.ஆ.ச. கண்டனம்

(மந்திகை)

ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதி இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டமை, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்துக்கே இழுக்காகும்;

இவ்வாறுஇலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை வெளியிட்ட கண்டன அறிக்கையில் வருத்தம் தெரிவித்துள்ளது;

எழுத்தறிவித்தவனைக் கடவுளாகப் போற்றும் எமது சமூகத்தில் இப்படியான சம்பவங்கள் மேலும் தொடராதிருக்க கல்விச்சமூகம்ஆவன செய்யவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-23)

# மகாபொல கொடுப்பனவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2001-2002 கல்வி ஆண்டில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபொலபுலமைப்பரிசில் தகுதி பெற்ற மாணவர்களுக்குரிய மீதி ஏழுமாதக் கொடுப்பனவை நாளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமக்கள்வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என உதவிப்பதிவாளர் (நலச்சேவை) ஆர். ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (உ-77)

148 நிலையங்களில்

# போலியோ சொட்டு மருந்து

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 148 போலியோ நிலையங்கள் ஊடாக சுமார் 16 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதாகவவுனியாமாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் டாக்டர் ஏ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க வவுனியா தமிழ் பிரிவில் 80 நிலையங்களும் சிங்களப் பிரிவில் 19 நிலையங்களும், வெங்கலச் செட்டிக் குளத்தில்33 நிலையங்களும் மற்றும் வவுனியா வடக்கு நெடுங்கேணியில் 16 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (உ-8)

# வைத்தியர் இல்லாத மருத்துவமனை

(தென்மராட்சி)

நயினாதீவு அரசினர் வைத்திய சாலைக்கு கடந்த நான்கு மாதங்களாக வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாக நயினாதீவு அரசினர் வைத்திய சாலைக்குச் செல்கின்ற நோயாளர்கள் ஏமாற்றத்துடன்திரும்ப வேண்டியுள்ளது.

இவ் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குப்படி கோரிக்கைகள் பல விடுக்கப்பட்டிருந்தும் கூட உரியதிணைக்களம் எவ்வித அக்கறையும் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-77)

# மருதங்கேணி ஆஸ்பத்திரி புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக முற்றாகச் சேதமடைந்த மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையின் மீளமைப்புவேலைகள் முடியும்வரை இம்மாத இறுதிப் பகுதியிலிருந்து தனியார் கட்டடம் ஒன்றில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது;

மேற்படி வைத்திய சாலையை நவீன வசதிகளுடையதாக மீளமைக்க நிக்கோட் திட்டத்தின் கீழ் 236 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (உ-6)

நீர்க் குழாய்கள்

# அமைப்பு

(கொழும்பு)

ஸ்ரெட்டன் தோட்டத்தில் ஈஸ்ரன் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக நேற்றுக் காலைநீர்க் குழாய் அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நூற்றிற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு குடிநீர் வசதியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்திட்டத்திற்கு 10 லட்சம்ரூபாவழங்கப்பட்டதாக வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (உ-10)

# தண்ணீர் தாங்கிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை உறுப்பினர் கிங்ஸ்லி கணேசன் தனது நிதியில் இருந்து பொம்மைவெளி மக்களின் பாவனைக்காக இரு தண்ணீர் தாங்கிகளை வழங்கியுள்ளார். (உ-6)

பலஸ்தீன தலைமையக வளாகத்தில்

# முற்றுகையிடப்பட்டுள்ள அரபாத் தொலைபேசியில் உரையாடல்

(ஜெருசலேம்)

தமது அலுவலகத்தில் தங்கியிருப்பவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறு இஸ்ரேல் விடுத்த கோரிக்கையை பலஸ்தீனத் தலைவர் யஸீர்அரபாத் நிராகரித்துள்ளார். இத்தகவலை அரபாத் தைச் சந்தித்த பலஸ்தீன அமைச்சர் ஒருவர் வெளியிட்டிருக்கின்றார்.

மேலும் அமெரிக்கப் பிரதிநிதிகள் முன்நிலையில் இஸ்ரேலோடு அரசியல் மற்றும், பாதுகாப்புக் குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்த அரபாத் விரும்புவதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அரபாத்தை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலின் நடவடிக்கைக்கு சர்வதேச நாடுகள் அதிர்ச்சி வெளியிட்டு வரும் நிலையில் பலஸ்தீன அமைச்சர் சார்ள்ஸ் அகிரேட் இஸ்ரேல் படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதோடு அதன் பின் அரபாத்தையும், சந்தித்து தாம் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்து விளக்கி யுள்ளார்.

இதற்கிடையே முற்றுகையிடப்பட்டுள்ள யஸீர் அரபாத் தொலைபேசி வழியாக பெத்தலகேம்



பல்கலைக்கழகத்தில் கூடியிருந்த சுமார் 3000மாணவர்களுக்கு உரைநிகழ்த்தியுள்ளார். விரைவில் ஜெருசலேமுக்குச் சென்று பலஸ்தீனக் கொடியைப் பறக்க விடுவேன் என்றும் தொலைபேசியினூடாக அவர் தெரிவித்தார். (சு)

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மாலைதீவுக்கு சுற்றுப்பயணம்



(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நான்கு நாள் பயணமாக மாலைதீவு போய்ச் சேர்ந்தபோது அவருக்கு அங்கு சம்பிரதாய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின்பு இந்தியப் பிரதமர் மாலைதீவுக்குச் சென்றது இதுவே முதல் தடவை.

முன்னதாக, டில்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களுடன் பேசியபோது ஜம்மு - காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு இரு தரப்புப் பேச்சுக்களைத் தொடரும எண்ணம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தைத் தூண்டி விட்டுத் துணை நிற்பதையும், எல்லை கடந்து ஊடுருவல் செய்வதையும் இஸ்லாமபாத் நிறுத்திக்கொள்ளாதவரை அந்த நாட்டுடன் பேச்சு நடத்த முடியாது என்றும் ஜம்மு - காஷ்மீர் தேர்தல்களை குழப்புவதற்கு பாகிஸ்தான் முயற்சி செய்வதிலிருந்து அது தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் அவர் மேலும் கூறினார். மாலைதீவு அதிபர் மாமூன் அப்துல் கயூமிற்கும், இந்தியப் பிரதமரிற்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுக்களில் தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மனிதவள மேம்பாடு, சுகாதாரம், பயங்கரவாதத்தை முறியடித்தல் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்தல் என்பவை தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை மாலைதீவில் அளித்த விருந்தில் கலந்து கொண்ட வாஜ்பாய் பேசுகையில் பயங்கரவாதம் பற்றிய சார்க் நாடுகளின் தீர்மானத்தை தற்போது நிலைமைக் கேற்ப மாற்றியமைப்பது அவசியம் என்று கூறிய வாஜ்பாய் இப்பிரச்சினையை விவாதிக்க அமைச்சர் நிலைக்கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு இந்தியா யோசனை நடத்தியுள்ளது என்றும் கூறினார்.



மெக்ஸிகோவில் பதிவான வானிலை அளவின்படி நேற்று முன்தினம் மணிக்கு 161கி.மி வேகத்தில் காற்று வீசியது இந்தப் புயல் காரணமாக 40ஆயிரம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

# ஜம்மு - காஷ்மீர் அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் சக்கீனா இந்துத் தீவிர வாதிகளின் கொலை முயற்சியிலிருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளார். நேற்றுமுன்தினம் அனந்தனாறு மாவட்டத்தில் தேர்தல கூட்டமொன்றில் பேசுவதற்காகச் சென்ற போது தீவிரவாதிகளின் சக்தி வாய்ந்த நிலக்கண்ணி வெடிகளில் ஒன்றை வெடிக்கச் செய்ததில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். அவருடைய பாதுகாவலரும், சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டார்கள். கடந்த 12நாட்களில் அமைச்சரைக் கொல்ல தீவிரவாதிகள் மேற்கொண்ட நான்காவது முயற்சியிது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

(பக்தாத் )

அமெரிக்க கடற் படையினர் எரிபொருளை கடலில் கலந்து ஈராக்கின கடற்பகுதியை மாசுபடுத்தி வருவதாகவும், மீனவர்களை அச்சுறுத்தி வருவதாகவும் ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

எரிபொருளை கடலில் கலக்கி விடுவதை அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் வேண்டுமென்றே மேற் கொண்டு வருவதாக ஈராக்கிய செய்மதி தொலைக்காட்சி சேவை.. தகவல் வெளியிடடுள்ளது.

இந்த செயல் சூழலைப் பெரிதும் பாதிப்புறச் செய்துள்ளதாகவும் ஈராக் மீன் வளத்தை அச்சுறுத்துவதாகவும் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (சு -10)

# மும்பை தொடர் குண்டு தாக்குதலின் குற்றவாளி இன்டர்போலினால் கைது!



(புதுடிலலி)

மும்பை தொடர் குண்டு வெடிபபின் முக்கிய குற்றவாளியும், நிழல் உலக தாதாவுமான அபூ சலீமை அவனுடைய காதலியான மோனிகா பேடி கொடுத்த தகவல்களை அடுத்து சர்வதேச காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

பல்வேறு பெயர்களில் பல கடவுசீட்டுகளை வைத்துக் கொண்டு மிக எச்சரிக்கையாக உலகம் முழுவதும் சுற்றிவந்த அபூ சலீமை பிடிக்க சர்வதேச காவல்துறையினர் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்காத நிலையில், அவனுடைய நீண்ட நாள் காதலி மோனிக்கா பேடியின் உதவியுடன் சர்வதேச காவல்துறையும், அமெரிக்காவின் எ.்.ப்.பி.ஐ.யும இணைந்து விரித்த வலையில் அபூசலீம் சிக்கியுள்ளான் என்று மத்திய புலனாய்வுக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி நியூயோர்க் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்பு,சர்வதேச அளவில் இயங்கிவரும் குற்றவாளிகளையும், பயங்கரவாதிகளையும் முடக்க அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எ.்.ப்.பி.ஐ. கடும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு அங்கமாக, மும்பையில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமான அபூசலீமை பிடிக்கும் பணியிலும் சர்வதேச காவல்துறையுடன் இணைந்து எ.்.ப்.பிஜ. தகவல் சேகரித்துவந்தது.

கடந்த ஓராண்டாகவே எ.்.ப்.பிஜ.யும், சர்வதேச காவல்துறையான இன்டர்போலும் அபூசலீமின் காதலி மோனிகா பேடியுடன் ரகசிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அபூசலீமின் நடவடிக்கைகளை கண்காணித்து வந்தன. ஆனால ஒவ்வொரு முறையும் மோனிகா பேடி எங்கே வந்து தன்னைச் சந்திக்க வேண்டும் என்பதனை அபூசலீம் கடைசி நேரத்தில் தெரிவித்து வந்ததனால் அவனைப் பிடிக்க சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று அந்த அதிகாரி செய்தியாளர்களிடம் கூறினார்.

கடைசியாக லிஸ்பனில் உள்ள ஒரு பூங்காவிற்கு வருமாறு மோனிகா பேடிக்கு அழைப்பு விடுத்ததாகவும், அத்தகவலை எ.்.ப்.்.பிஜக்கும், இன்டர்போலுக்கும் தனது தோழி ஒருத்தியின் வாயிலாக மோனிகா பேடி தெரிவித்துவிட்டுச் சென்றதாகவும், அதனையடுத்தே அபூசலீம் கைது செய்யப்பட்டான் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

# பலஸ்தீனத்தில் பயங்கரம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 5பேர் கொல்லப்பட்டதோடு 40ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பலஸ்தீனத்தின் ரெல்அவிவ் பகுதியில் பேருந்து ஒன்றிலேயே இந்த பயங்கரத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இச்சம்பவத்தில் காயமடைந்தோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதோடு பலரின் நிலை கவலைக்கிடமானது என மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த இரண்டுநாட்களில் இடம் பெற்ற இரண்டாவது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இதுவாகும்.

# எண்ணெய் விலை அதிகரிப்பு அமெரிக்கா கண்டனம்

(டோக்கியோ)

அதிகரித்த எண்ணெய் விலைகளால் உலகப் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜப்பானிய நகரான ஒஸாகாவில் நடைபெற்ற சர்வதேச சக்தி மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க எண்ணெய்த் துறை அமைச்சர் சென்ஸ் ஏபிரகான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலகின் மிகக் கூடிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடான சவுதி அரேபியாவின் எண்ணெய் துறை அமைச்சர் அலிஅல்ரைன் மத்திய கிழக்குப் பிரச்சினை காரணமாக எண்ணெய் விநியோகம் சீர்குலையும் என அச்சமடையத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

# வியட்நாமில் பெருவெள்ளம் 21 பேர் உயிரிழப்பு

(ஹானா)

மத்திய வியட்னாமில் இந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக 21பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் சிறுவர்களே அதிகமானவர்கள் என அறியப்படுகிறது.

கடந்த யூலைமாத பிற்பகுதியில் இருந்து வியட்னாமில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பெருமளவான சொத்துக்கள் சேதம் அடைந்ததுடன் 152 பேர் இதுவரை உயிர்இழந்தும் உள்ளார்கள்.

வியட்னாமின் பாரிய ஆறான பீக் கொங்டெல்ரா, கடந்த 7 வாரங்களாக பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறதால் ஆயிரக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் வாடுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

ஈராக் செல்லும்

# ஆயுதக் கண்காணிப்புக் குழுவில் 17 நாடுகளின் பிரதிநிதிகள்

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அனுமதியுடன் ஈராக்கிற்கு பயணம் செல்லவிருக்கும் ஐக்கிய நாடுகள்ஆயுதக் கண்காணிப்புக் குழுவில் 17 நாட்டைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றுள்ளதாக சர்வதேச அணுசக்திமையம் தெரிவித்துள்ளது.

அரபு மொழியில் உரையாட வல்ல எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் மற்றும் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த இருவர் உட்பட 17 நாடடைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதிக் குழுவில் இடம் பெறுவார்கள் என வியன்னாவில் இருந்து செயற்படும் ஐக்கிய நாடுகள் அணுசக்தியின் ஏஜென்சி செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறியுளளார்.

4 வருடங்களிற்கு முன் ஈராக்கை விட்டு வெளியேறிய ஐ.நா.ஆயுதக் கண்காணிப்புக் குழுவை மீண்டும் அனுமதிக்க ஈராக் ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# சிம்பாவே தடைவிதிப்பு விவகாரத்தில் பொதுநலவாய நாடுகளின் தலையீடு

(ஹராரே)

சிம்பாவே மீதான தடைவிதிப்பு விவகாரத்தில் பொதுநலவாய அமைப்பு நாடுகள் வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளன.

அமைப்பின் மேற்கு நாடுகள் சிம்பாவே மீது கடுமையான தடைகளை விதிக்குமாறு கூறிவருகின்ற போதிலும், ஆபிரிக்க நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

சிம்பாவேயில் வெள்ளைநிற பண்ணையாளர்களின் நிலங்களைச் சுவிகரித்துக் கொண்டதுடன் கடந்த மார்ச மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஜனாதிபதி றொபேட முஹாமின்மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் மேற்கு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆபிரிக்க நாடுகளின் தலையீட்டால் ஜனாதிபதி மீது நடவடிக்கை எடுக்கமுடியாமல் போனமை நல்லதொரு வாய்ப்பை இழக்கச செய்துள்ளதாக சிம்பாவேயின் எதிர்க்கட்சியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்ரேலியா, கனடா, பிரிட்டன், நியூஸ்லாந்து ஆகிய நாடுகள் சிம்பாவே ஜனாதிபதி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதில் முன்னணி வகிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.(04)




மாலைதீவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள பிரதமர் வாஜ்பாய்க்கு மாலே நகர மக்கள சார்பில் வரவேற்பு அளிககப்பட்டது. மாலைதீவு உள்துறை மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சரும் மேயருமான இமாயில் க்ாஃப்பூ, மாலேநகர் சாவி ஒன்றை வாஜ்பாய்க்கு பரிசாக அளித்தார்.



வியட்நாமில் நடந்த அழகிப் போட்டியில் மிஸ்வியட்நாம் ஆகத் தேர்தெடுககப்பட்ட பள்ளி மாணவி பாம்தி மாய் புவோங் (நடுவில்) உடன் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடித்த அழகிகள்.

# இன்று ஒரு தகவல்

## நட்பில் குறையில்லை

இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் நட்பாகஇருப்பது நல்லதுதான். அது அவசியமும் கூட! நல்ல நட்புக் கூட-அது நல்லவிதமாக உபயோகப்பட வேண்டுமென்றால் அதற்குப் புத்திசாலித்தனம் தேவை. இந்தக் கருத்து உங்களுக்கு கொஞ்சம் வித்தியாசமாகப் படலாம். இருந்தாலும் அதிலே உள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இந்தக் கதையை நீங்கள் கேட்க வேண்டும்.

ஒரு காய்ந்துபோன இலை, ஒரு மண்ணாங்கட்டி. இவை இரண்டும் மிக்க சிநேகிதம். மிகவும் பிரியமாக நட்பாகப் பழகிக் கொண்டிருந்தன. அதாவது மண்ணாங்கட்டியும் இலையும் நண்பர்கள்! ஒருநாள் இவை இரண்டும் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தன. 'நாம்இப்படியே இருந்து கொண்டிருக்கிறோமே! போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ள வேண்டாமா? என்று கேட்டது இலை. தேடிக்கொள்ள வேண்டியது தான்! அதற்கு என்ன பண்ணலாம்? என்று கேட்டது மண்ணாங்கட்டி.

'வேறு என்ன பண்ணுவது? மனிதர்கள் புண்ணியம் தேடுவதற்கு என்னசெய்கிறார்கள்? காசிக்குப் போகிறார்கள். அதேமாதிரி நாமும் காசி யாத்திரை புறப்பட வேண்டியது தான்' என்றது இலை. 'சரி புறப்படுவோம். இருந்தாலும் நீயோ இலை, நானோ மண்ணாங்கட்டி! நாமிருவரும் காசிக்குப் போவதென்றால் வழியில்நிறையத் தொந்தரவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்' என்றதுமண்ணாங்கட்டி. 'அது நியாயந்தான்' என்றது இலை. சரி என்று இரண்டும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன. அதாவது போகிற வழியில் ஏதாவது துன்பம் வந்ததென்றால்... இரண்டும் ஒன்றுக்கொன்று உதவிசெய்து கொள்ள வேண்டும். அதுதான் அந்த முடிவு.

இப்படி ஒரு ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு இரண்டும் புறப்பட்டன. கொஞ்சநாள் பிரயாணஞ் செய்தன. ஒரு நாள் கடுமையான காற்று வீச ஆரம்பித்தது. இலைக்குத் தொந்தரவாகப் போய் விட்டது. மண்ணாங்கட்டி பார்த்தது. உடனே ஒப்பந்தப்படி அந்த இலைமேல் ஏறி உட்கார்ந்து கொண்டது. அதனால் அந்தஇலையைக் காற்று அடித்துக் கொண்டு போக முடியவில்லை. மண்ணாங்கட்டி இலையைக் காப்பாற்றி விட்டது. காற்று ஒரு வழியாக நின்றது. மறுபடியும் இரண்டும் பிரயாணம் பண்ணஆரம்பித்தன.

கொஞ்ச நாட்கள் ஆயின. திடீரென்று ஒரு இடத்தில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. உடனே அந்த இலை என்ன செய்ததென்றால் மண்ணாங்கட்டி மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது. அதாவது அதை இது மூடிக்கொண்டது. மழைத் தண்ணீர் மண்ணாங்கட்டி மீது படமுடியவில்லை. அதனால் அது கரைந்து போகாமல் இது காப்பாற்றி விட்டது. இரண்டுக்கும் மிகுந்த சந்தோஷம்.

பார்த்தாயா! நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கின்றோம். "என்று பேசிக்கொண்டன;

வெகு உற்சாகமாக அவை இரண்டும் மேற்கொண்டு பிரயாணம் பண்ண ஆரம்பித்தன. இன்னும் கொஞ்சத் தூரம் போயின அங்கே என்ன ஆனது தெரியுமா? காற்றும் மழையும் சேர்ந்து அடிக்க ஆரம்பித்து விட்டன. காய்ந்த இலை பறந்து போனது. மண்ணாங்கட்டி கரைந்து போனது. காற்றில் அடித்துக் கொண்டு போகப் பட்ட இலை ஒரு கற்குவியல் மேல் போய் விழுந்தது. வீதி அமைப்பதற்காக கருங்கல் ஜல்லி கொட்டி வைத்திருந்தார்கள். அங்கேயிருந்த ஒரு சிறிய கருங்கல்லினிடம் இலை தன்னுடைய நிலையைச் சொல்லிப் புலம்ப ஆரம்பித்தது. மண்ணாங்கட்டி இப்படிக் கரைந்துபோய் விட்டதே என்று சொல்லி வருத்தப்பட்டது.

இப்போது அந்தக் கருங்கல் துண்டு "உங்கள் நட்பு சரி தான். அதில் ஒன்றும் குறையில்லை. இருந்தாலும் காசிக்குப் போகவேண்டும் என்கின்ற உன்னுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால்-நீ என்னைப் போன்ற ஒரு கருங்கல்லைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றது.

இதுதான் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை. எந்த நட்புஎந்தச் சமயத்தில், எப்படி உதவும் என்பதைப் புரிந்து கொள்ளவதுதான் முக்கியம்.

ஒரு ரயில் சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருச்சிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதில் முதல் வகுப்புப் பெட்டியில் இரண்டுபேர் அதில் ஒருவர் இன்னொருவரைப்பார்த்து 'நல்ல வேளை...நீங்களும் எனக்குத் துணையாக வருவது செளகரியமாகப் போயிற்று ஒருவருக்கொருவர் துணையாக இருக்கலாம் நான் தனியாகப் போவதற்கு பயந்தேன்... ஏனென்றால் என்னிடம் 10,000/-ரூபா பணம் இருக்கின்றது. அதைப்பத்திரமாகக் கொண்டு போகவேண்டும் என்று கவலைப்பட்டேன். நீங்கள் துணையாக இருப்பது நல்லதாகப் போய்விட்டது' என்றார்.

அடுத்தவர் இதைக்கவனமாகக் கேட்டுக்கொண்டார். பணத்தை அடித்துக் கொண்டுபோகத் திட்டம் போட்டுவிட்டார். பணம் வைத்திருந்தவர் சிறிது கண்ணை மூடிய உடனே... இவர் பரபரப்பாக அவரின் பெட்டியைத் திறந்தார். பணத்தைக்காணவில்லை. அவர் வைத்திருந்த மற்றத் துணிமணிகளை உதறிப் பார்த்தார். பணம் இல்லை. சரி...ஆசாமி நம்மிடம் பொய் சொல்லியிருக்கிறார், என்று நினைத்துவிட்டார். விடிந்தது, ரயில் திருச்சிக்குப் போய்ச்சேர்ந்தது. அப்பாடா! பணத்தைப்பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்து விட்டேன் என்றார் அவர். எங்கே சார் வைத்திருந்தீர்கள் பணத்தை? என்று கேட்டார்.

அவர் நீங்கள் பாத்ரூம் போயிருந்தசமயம் என்னுடைய பணத்தை உங்கள பெட்டியில் வைத்துவிட்டேன் சார்...பத்திரமாக இருக்கட்டுமென்று. இப்போது எடுத்து விட்டேன் என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

### அகதிகள் மீள்குடியேற்றம்

# அரசின் முடிவுக்கு மாறாக செயற்படும் அதிகாரம் எவருக்கும் கிடையாது

## ஒஸ்ரின் கண்டிப்பான அறிவிப்பு

(கொழும்பு)

அகதிகள் மீள்குடியேற்றம் தொடர்பாக அரசாங்கம் கொள்ளும் முடிவுகளுக்கு மாறாக செயற்படும் அதிகாரம் எவருக்கும் கிடையாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிலவிய பிரதேசத்தில் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு உள்வாங்கச் செய்வதில் நிலவும் பிரச்சினைகளைக் களைய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானங்களை மேற்கொள்கின்றது. இதற்கு மாறாகச் செயற்பட்டு அகதிகள் மீள் குடியேறுவதைத் தடுத்து நிறுத்த எவருக்கும் அதிகாரம் கிடையாது.

அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளின் முதற் கட்டப் பணிகள் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும். அகதிகள் மீள் குடியேற்ற விடயத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உறுதியானவை என்று ஒஸ்ரின் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும் இராணுவத்தினர் கண்காணிக்கப்படுவர் எனவும், புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதற்கென வட பகுதி இராணுவ அதியுயர் வலயங்களை கையாளவதற்கான விசேட குழுவொன்றை பிரதமர் நியமிக்கவுள்ளார் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

---

## தவறிவீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து சென்ற பெண்மணி தவறி விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் கட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நவாலிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தி.மல்லிகா தேவி (வயது-45)என் ப வரே படுகாயமடைந்துள்ளார். (உ-6)

---

## இராசி பலன்

25 - 9 - 2002

(புரட்டாதி 9, புதன்)

சதுர்த்தி பி.இ. 3.22 வரை

பரணி பி.இ. 4.01 வரை

இராகு காலம் - 12.02-1.32

நல்ல நேரம் -4 32-6.02

சித்தாமிர்தம், மகாபரணி

**மேடம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, நல்ல முயற்சி, காரிய அனுகூலம், சயன சுகம்.

**இடபம்**

வீண் மனஸ்தாபம், காரியச் செலவு, பிதாவழி உறவு, பிரயாணம்.

**மிதுனம்**

காரிய அனுகூலம் தன லாபம, குடும்ப நலம், கௌரவம.

**கடகம்**

அதிக பிரயாசை, இலட்சுமிகரம, உறவினர் உதவி, நல்ல செய்தி.

**சிங்கம்**

உடல் வியாதி, மனக்கிலேசம, பிரயாணம், காரிய தாமதம்.

**கன்னி**

எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம், உஷ்ண, வியாதி, பிரயாண பயம்.

**துலாம்**

காரிய நன்மை, களஸ்திர சுகம், நல்ல உணவு கிடைத்தல், அபூர்வ சந்திப்பு.

**விருச்சிகம்**

சந்தோசமான சம்பவம் சத்துரு ஜெயம், தனவரவு, முயற்சி கைகூடும்.

**தனுசு**

புத்திரரால் கவலை, வியாபார நன்மை, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம்.

**மகரம்**

பயந்த சுபாவம், மாணவர் கல்வி மேன்மை, நண்பர்கள் சந்திப்பு, ரோக பயம்.

**கும்பம்**

எதிர்பாராத நன்மை, பிரயாண சுகம், கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு.

**மீனம்**

மாதர் நட்பு, கௌரவக் குறைவு, காரிய தாமதம், எதிர் பாராத நன்மை.

**வளவன்**

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

---

## இலங்கைக் கலைஞருக்கு இந்தியாவில் பாராட்டு

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கைச்சேர்ந்த விஸ்வப்பிரம்மகுல திலகர் விஸ்வ ஸ்ரீ செல்லையா விஸ்வலிங்கம் ஆச்சாரியார் இந்தியா சென்னை சைதாப்பேட்டை பெரியபாளையத் தம்பன் கோவிலுக்கு கைலயங்கிரி வாகனம், தேர், தண்டிகை முதலியனவற்றைத்திறம்படச் செய்து கொடுத்தமைக்காக மேற்படி ஆலயநிர்வாகத்தினர் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

இவர் இலங்கையிலும் கோயில்தேர்கள், வாகனங்கள் மஞ்சம் முதலியன செய்து பலரதும் பாராட்டுதல்களைப் பெற்றவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-234)

---

## சிறுவர் நலன்பேண விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கவனிக்கவென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட பொலிஸ் பிரிவொன்றுஉள்துறைஅமைச்சர் ஜோன் அமரதுங்கவின் விசேட பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தலைமையில் சிறுவர் தினமான எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான சகல விதமான துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்களுக்கு எதிராக சகலவித சட்ட நடவடிக்கைகளையும் இப் பொலிஸ் பிரிவு மேற்கொள்ளும். (உ)

---

## வீதி பாவனைக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் செல்லும் வீதி மக்கள் பாவனைக்காக படையினரால் திறந்துவிடப்பட்டுள்ளது.

இவ்வீதி, கடந்த 95 ஆம் ஆண்டுமுதல் மக்கள் பாவனைக்குப் படையினரால் தடைவிதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

---

## பத்திரிகை வாயிலாக பிரபாவுக்கு அழைப்பாணை

### நீதியரசர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக சிங்கள ஜாதிக சங்கமயவின் பொதுச் செயலாளர் கலாநிதி பியசேன திஸாநாயக்க மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்த றிட்மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நீதியரசர்கள் திலக வர்த்தன, ஸ்ரீபவன் விஜயரட்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முதலாவது எதிர் மனுதாரராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இரண்டாவது எதிர் மனுதாரராக வேலுப்பிள்ளை பிரபாகரன், மற்றும் அமைச்சர்கள் பலரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதமர் சார்பில் சட்டமா அதிபர் கே. சி. கமலசபேசன் ஆஜராகியிருந்தார்.

சிங்கள ஜாதிக சங்கமய சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர, இரண்டாவது எதிர் மனுதாரர் பிரபாகரன் அரச கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசத்தில் வசிப்பதனால் அழைப்பாணை. அனுப்ப முடியாதிருப்பதாக தெரிவித்தார் பிரபாகரன், மே/பா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, என்று முகவரியிட்டு அனுப்பப்படலாம் என்றும் அங்கு தெரிவித்தார்.

இதனை பத்திரிகைகள்மூலம் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கலாம் என நீதியரசர்கள் தெரிவித்தனர். தான் பிரதமர் சார்பில் மட்டுமே ஆஜராகியுள்ளதாகவும், ஏனையோருக்கு அனுப்பப்படும் அழைப்பாணைகளுக்கு பொறுப்பேற்க முடியாது என்றும் சட்டமா அதிபர் அங்கு தெரிவித்தார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்ப உலக உணவுத்திட்டத்தினால் தொடர் திட்டங்கள்

(கொழும்பு)

**தற்போது நடைபெற்றுவரும் சமாதான பேச்சுவார்த்தைகள் குறித்த நம்பிக்கைகள் வளர்ந்து வருவதன் காரணமாக, யுத்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கான தொடர்திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம் ஆரம்பித்துள்ளது.**

இவ்வாறானதொரு சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைவரும் மீளக்குடியேற வேண்டுமெனவும், அவர்களுக்கு உதவ இது சிறந்த தருணமாக தாம் எண்ணுவதாகவும் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வீதிகள், நீர்ப்பாசன வலய அமைப்புகள், பாடசாலைகள், சுகாதார முகாம்கள் போன்ற அடிப்படை சமூக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக இவ்வமைப்பு ''வேலைக்காக உணவு'' என்ற திட்டத்தினையும் ஆரம்பிக்கவுள்ளது.

இது தற்போதுநடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு கணிசமான அளவு பங்களிப்பை செய்யும் என தான் நம்புவதாக இலங்கைக்கான உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் ஜெட்ஹிராவ்டி தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உதவி வழங்குமாறுபல்வேறு அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் மக்கள் மீளக் குடியமரும் வேகத்துக்கு ஒப்பானதாக தமது நிவாரணத் திட்டத்தை உணவு ஸ்தாபனம் விஸ்தரித்து வருவதாகவும்

இதற்காக கடந்த ஜனவரி மாதத்தில் ஒதுக்கப்பட்ட 3 கோடி 50 இலட்சம் டொலர் தொகை மேலும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் ஜெட்ஹிராவ்டி மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, கடந்தகாலயுத்தத்தின் விளைவாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலவிவரும் போசாக்கு குறைபாடுபற்றி உலகஉணவுத் திட்டம் ஆழ்ந்த கவலையை தெரிவித்துளளது.

போர் காரணமாக 50 சதவீதமான சிறார்கள் எடை குறைந்தவர்களாகவும், 50 சதவீதமான பெண்கள் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள் என அந்தஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்தம்காரணமாக விதவையான பெண்கள் இலங்கையில் அதிகம் என்பதனால், குடும்பச்சுமையை பெண்களே தாங்கவேண்டி இருப்பதுவும், ஆண் பாதுகாவலர்கள் இல்லாத சமூகப்

(2-ம் பக்கம் பார்க்க)

# வடக்குமக்களின் வாழ்வைமேம்படுத்த மக்கள்வங்கிஎன்றும் தயாராகவுள்ளது

### சிரேஷ்ட பொது முகாமையாளர் மாக்கஸ் ஜெயசிங்க

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதை அடுத்து மக்கள் வங்கியின் வெளிநாட்டு வதிவிடக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு மூலப்பொருட்கள் இறக்குமதி யாழ். குடாநாட்டு மக்களின் தேவை கருதி நடைமுறைப்படுத்தப் படவுள்ளது என மக்களவங்கியின் சிரேஷ்ட பொதுமுகாமையாளர் திரு எச். டி. ஏ. மாக்கஸ் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்

யாழ் மக்கள் வங்கிக்கன்னாதிட்டிக் கிளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புதிய பல திட்டங்களை யாழ். மக்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மக்களின்தேவைகள் அறிந்து மக்கள் வங்கி செயற்பட்டுவருகிறது.

ஸ்ரான்லிக்கிளையில்அடுத்த ஆண்டு ஜனவரிமாதத்தில் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடகாலங்களில் யாழ்.மக்கள் பட்ட கஷ்டங்களை நாம் அறிவோம் இனி வரும் காலங்களில் அவர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு மக்கள் வங்கி அயராது சேவையாற்றவுள்ளது.

தென்பகுதி மக்களும் வடபகுதி மக்களும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டின் பொருளாதார வளத்தை எழுப்புவதற்கு, என்றும் மக்கள வங்கி உறுதுணையாக இருக்கும் என்றார்.

வட பகுதி மக்கள் கடந்த கால யுத்தத்தினால் தமது பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாமல் போய்விட்டது. ஆனால் இந்தசமாதான சூழலில்அவர்களின் பொருளாதார வளர்ச்சியில் மக்கள் வங்கியின் பங்கு காத்திரமானதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டினார்.

இச்சந்திப்பில் வதியாதோர் வெளிநாட்டுக் கணக்குப் பிரிவு பிரதான முகாமையாளர் ஏ. எஸ். சிறிசேன, யாழ். பிரதேச முகாமையாளர் கே. சிவபாதவிருதயர் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-6)

# அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றத்தைக் கையாள பிரதமரால் தனியானகுழு அமைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வழமை நிலையை ஏற்படுத்துவதற்கும் புரிந்துணர்வு உடன் படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதற்கும்

இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தடையாக உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதையடுத்து, இவ்விடயத்தை தனியாகக் கையாள்வதற்காக பிரதமர் ரணில்விக்கிரமசிங்க விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளார்

பிரதமரின் அலுவலகத்தில் இயங்கும் சமாதான செயலகத்தையும் பாதுகாப்பு அமைச்சையும் இணைக்கும் வகையிலேயே இக் குழு அமைக்கப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் தற்போதுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் அகதிகள் மீளக்குடியேறுவதில் பெரும் பிரச்சினை உள்ளதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் எதிர்நோக்கப்படுகிறது.

இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் துரிதப்படுத்துவதற்காகவே அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயங்களை எவ்வாறு கையாள்வதென முடிவு செய்வதற்காக விசேட குழுவொன்றை நியமிக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கைப் புனரமைக்கவென தாய்லாந்தில் அரசாங்க- புலிகள் தரப்பினருக்கிடையே இணக்கம் காணப்பட்ட, கூட்டு செயலணிக்குழுஅடுத்த வாரமளவில் நியமிக்கப்படவுள்ளதாக சமாதானசெயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி செயலணிக்குழுவில் இரு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு ஒரு குழு பொறுப்பாகவும், புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்றப் பணிகளுக்கு ஒரு குழு பொறுப்பாகவும் நியமிக்கப்படவுளளன.

இக் குழுக்களில் அரச -புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் தவிர கண்காணிப்புக்குழுவினரும் அங்கம் வகிக்கவுள்ளதால் கண்காணிப்புக் குழுவினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (உ)

# மூன்று வாய்களுடன் பிறந்த கன்றுக்குட்டி

(கொழும்பு)

பலாங்கொடை பகுதியில் மூன்று வாய்களையுடைய அதிசயக் கன்றுக்குட்டியொன்று பிறந்துள்ளது

பலாங்கொடை வெவவத்த தனியார் தோட்டத்தில்வசிக்கும் ரி. ஜேசுவடியான் என்பவரின் வீட்டில் உள்ள பசுவே இந்தக் கன்றை ஈன்றுள்ளது.

கன்றுக்குட்டியின் பிரதான வாய் வழமையான இடத்தில் அமைந்துள்ளது. ஏனைய இரு வாய்களும் தலையின் இரு புறமும் அமைந்துள்ளன.

கன்றுக்குட்டிஆரோக்கியமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## மனித உரிமை மீறல்

# சுமார் 7இலட்சத்தை அரசு நட்ட ஈடாக வழங்கியது

(கொழும்பு)

மனிதஉரிமைகளைமீறியகுற்றச்சாட்டுக்களுக்காக 6இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக கடந்த மாதம் அரசாங்கம் வழங்கியுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கிஊழியர்கள்பத்துபேரின்பதவி உயர்வுகளைவழங்கும் விடயத்தில் மனித உரிமை மீறப்பட்ட குற்றச்சாட்டில் 4 இலட்சம் ரூபாவும்,

ஊர்காவற்றுறைப் பெண்ணொருவரைக் கைது செய்த நீர்கொழும்பு பொலிஸார் அவரைச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டின் பேரில் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் நஷ்ட ஈடாகவழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது (உ-8)

# வளிமண்டல ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தின் அதிகாரிகள் அடங்கிய குழுஒன்று எதிர்வரும் ஒக். 3 ஆம்திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இந்த அதிகாரிகள குழு மறுநாள் காலநிலை மாற்றம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை யாழ். மாவட்ட வளிமண்டல ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு நடத்தவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்டு இன்னும் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படஇருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது (உ-6)

# பொலிஸ் நிலையத்தை தாக்கிய காட்டு யானை

(கொழும்பு)

அனுராதபுரம் மாவட்டத்தின் பலுவெவ கிராமத்திலுள்ள பொலிஸ்நிலையத்தை காட்டுயானை ஒன்று தாக்கியதன் காரணமாகஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

யானையின் தாக்குதலில் இருந்து தப்பியோட முயன்ற 4பொலிஸ்கான்ஸ்டபிள்களும் பொது மக்கள் இருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

பொலிஸ் நிலையச்சுவரை இடித்துத் தள்ளிவிட்டு உள்ளிருந்தவர்களை யானை தாக்கியுள்ளது.

உணவு, தண்ணீர் தேடி குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்லும் யானைகளே இவ்வாறு மக்களைத் தாக்கி வருவதாக பொலிஸார்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# சுயதொழில் முயற்சிக்கு பல்வேறு திட்டங்கள்

(கொழும்பு)

வடமாகாண அகதிகளை சுயதொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் பல்வேறு திட்டங்கள் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் புத்தளம் மாவட்டத்தில் தங்கியிள்ள வடமாகாண அகதிகளுக்கு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பித்து வைப்பது தொடர்பாக புத்தளம் பாலாவி எருக்கலம் பிட்டியில் நடைபெற்ற நிகழ்வில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்ட வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டின் மஷிர், வடமாகாண அகதிகள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுதல் மாத்திரம் இன்றைய பிரச்சினை அல்ல, அவர்கள் நாளாந்த வருமானத்தை பெறுவதற்கான வழியையும் அரசாங்கமே மேற்கொள்ளவேண்டும் என கூறினார்.

இவ்வைபவத்தின் போது, நுரைச்சோலை ஆலங்குடா கிராமத்தில் வாழும் இடம் பெயர்ந்த யுவதிகள் 75 பேருக்கு தையல் இயந்திரங்களும்காப்புறுதி பத்திரங்களும் வழங்கப்பட்டன. (உ-7)



# பழமையும் புதுமையும் கலந்த பரதநாட்டிய அரங்கேற்றம்

# விதுபாவின் திறமையை எடுத்துக்காட்டியது



யாழ்ப்பாணத்திலுள்ள வீரசிங்கம் மண்டபம் மீண்டும் சிறப்பான கலையரங்காக மாறிவருகின்றது. அங்கு 18.8.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் செல்வி விதுபா பாலசுந்தரத்தின் நேர்த்தியான பரத நாட்டிய அரங்கேற்றம் தி. திருக்குமரன் தலைமையில நடைபெற்றது. மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற இவ்வைபவத்திலே இவ் இளங்கலைஞரின் 12 ஆடல் நிகழ்வுகளும் தலைவர், பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர் முதலியோரின் உரைகளும், இசைவேளையும் இடம் பெற்றன.

### தேவாரமும் திருப்புகழும்

சம்பிரதாய பூர்வமான பரத நாட்டிய அரங்கேற்றமாயினும், புதிய அம்சங்களையும் உள்ளடக்கி இலங்கிற்று. தொடக்கத்திலே அமிர்த வர்ஷினிராக, ஆதி தாளத்தில் அமைந்த புஷ்பாஞ்சலியும், ஆரபி ராக ஆதி தாளத்திலான விநாயகர் துதியும் அரங்கேற்றத்திற்கேற்ற இறை வணக்கமாக அமைந்தன. தோடுடைய செவியன் எனத் தொடங்கும் தேவாரத்திற்கான ஆடல் அற்புதமாக இடம்பெற்றது. இன்றைய பரத நாட்டிய நிகழ்வுகளில் சைவத் திருமுறைப் பாடல்கள் ஏதேனும் ஒன்று இடம் பெறுதல் வழக்கமாகின்றது. அலாரிப்பில் சண்முகப்பிரியா ராக, ஆதி தாளத்திலான ''பாதிமதி'' எனத் தொடங்கும் திருப்புகழ் இடம் பெற்றமை புதுமையாகும்.

### சபையோரின் கரகோஷம்

இதன் பின் ஜதீஸ்வரம் ஆடப்பட்டதைத் தொடர்ந்து ஹம்சத்வனி ராக, ஆதி தாளத்திலான கௌத்துவம் வெகுலாகவமாகவும், நேர்த்தியாகவும் ஆடப்பட்டது. இது நடராஜப் பெருமான் பற்றியதாகலின் அவருடைய வேகமான ஆடல் அசைவுகளும் நடன நிலைகளும் கொண்டிலங்கிற்று. செல்வி விதுபா இவற்றை எளிதாகச் செய்து சபையோரின் கரகோஷங்களைப் பெற்றார்.

தொடர்ந்து பரத நாட்டிய நிகழ்ச்சி நிரலிலே மிக முக்கியமான வர்ணம் இடம் பெற்றது. ரஞ்சனி ராக ஆதிதாள வர்ணத்தினை விதுபா வெகு நேர்த்தியாக நாயக - நாயகி பாவங்கள் சிருங்கார ரசம் நன்கு புலப்பட ஆடிச் சபையின் கரகோஷங்களைப் பெற்றார். சுமார் அரை மணித்தியாலம் இடம்பெற்ற வர்ணத்தின் பின் இசைவேளையும் தொடர்ந்து ரேவதி ராக, ஆதி தாளத்தில அமைந்த கீர்த்தனம் - சிறப்பாக அம்பாளின் வீரதீரச் செயல்கள், சிறப்புகளைப் புலப்படுத்தும் வகையில் அபிநயிக்கப் பட்டது.



தொடர்ந்து விதுபாக மணீஷ ரஞ்சனி ராக, ஆதி தாளத்திலான பதத்தினை பாவப் பொலிவும் ரசமும் நன்கு வெளிப்பட வெகு ரம்மியமாக ஆடினார். இதன் பின் ராகமாளிகை ஆதி தாளத்திலான ஆண்டான் பாடலுக்கான ஆடலைக் கண்ணனிடம் ஆண்டாள் கொண்டிருந்த தெய்வகக் காதலை நன்கு சித்திரிக்கும் வகையில் விதுபா ஆடினார்.

தொடர்ந்து மிக விறு விறுப்பும், அழகும், நேர்த்தியும் வாய்ந்த தில்லானாவும், தொடர்ந்து திருமதி. கே. திருச்செல்வத்தின் நன்றியுரையும் அதன்பின் மங்களமும் இடம் பெற்று நடன நிகழ்ச்சி மங்களகரமாக இனிது முடிவுற்றது.

### அழகியல் நடனக் கோலங்கள்

பரத நாட்டிய நிகழ்ச்சி நிரலிலே நிருத்தம், நிருத்தியமாகிய இரு பகுதிகள் இடம் பெறுவன. செல்வி விதுபாவின் நடன நிகழ்ச்சியில் மேற் குறிப்பிட்ட இரண்டும் பெருமளவு சம நிலையிலமைந்திருந்தன எனலாம். அடவுகள் சுத்தமாகவே விளங்கின. வேம்படி மகளிர் கல்லூரி மாணவியாகிய செல்வி விதுபா வளரும் இளங்கலைஞராக இருந்தாலும் நடனத்திற்கான வேகமான அசைவுகளை மட்டுமன்றி நளினமாக அழகியல் நடனக் கோலங்களையும், எளிதிலே செய்ய முடியாத நடன நிலைகளையும் வெகு இலகுவாகவும், அநாயாசமாகவும் செய்து சபையினரின் பாராட்டுக்களையும் பெற்றார். அரங்கிலவர் இடையிடையே மின்னல் கீறுகள் போலவும் தோனறினார். இவ் இளம் கலைஞரின் நடன நிகழ்ச்சி அவர் நடன நுணுக்கங்களை நன்கு அறிந்து பாடல்களுக்கு ஏற்றவாறு ஆடினார் என்பதைப் பெருமளவு புலப்படுத்திற்று. 12 ஆடல் நிகழ்வுகள் இத்தகைய இளங் கலைஞருக்குக் கூடுதலாக இருந்தபோதும் அவர் சலியாது, நன்கு களைக்காது சிறப்பாக ஆடியமை குறிப்பிடற்பாலது. இவரின் ஆடல்களினூடே பக்திரசமே நன்கு ததும்பிக் காணப்பட்டது.

### நடன சாஸ்திரம்

நடன சாஸ்திர நூல்கள் குறிப்பாக அபிநயதர்பணம் கூறும் ''எங்கு கை செல்லுகின்றதோ அங்கு கண் செல்லவேண்டும், எங்கு கண் செல்லுகின்றதோ அங்கு மனம் செல்ல வேண்டும். எங்கு மனம் செல்லுகின்றதோ அங்கு பாவம் தோன்ற வேண்டும். எங்கு பாவம் தோன்றுகின்றதோ அங்கு ரசம் தோன்ற வேண்டும்'' என்பதற்கேற்ப விதுபாவின் ஆடல் நன்கு விளங்கிற்று.

விதுபாவின் இத்தகைய ஆடல் திறமைக்கு இவருடைய குரு நாட்டியக் கலைமாணி, நடனகலாவித்தகர் திருமதி ஆனந்த ஜோதியின் வரன் முறையான நடனக் கற்பித்தல் முறையும், இடையறாத பயிற்சியும் மட்டுமன்றி, கலையார்வமுள்ள பெற்றோரான பாலசுந்தரம் தம்பதியினர் தொடர்ந்து அளித்துவந்த ஆதரவும் பேருக்கமும், விதுபாவின் இயல்பான கலைத்திறனும், ஆர்வமும் காரணங்கள் எனலாம்.

மேலும் இச்சிறப்பான ஆடல் நிகழ்ச்சிக்குத் தக்கவாறு வாய்ப்பாட்டிசை வழங்கிய இசை விரிவுரையாளர் திரு. ஸ்ரீ தர்சனனும், மிருதங்க வாத்திய இசை வழங்கிய விரிவுரையாளர் லய ஞான வாரிதி சி. மகேந்திரனும், வயலினிசை வழங்கிய (விரிவுரையாளர்) செல்வி பா. நடராஜாவும், வீணையிசை வழங்கிய இசைக் கலைமாணி வாசுகி ரங்கனும், புல்லாங்குழலிசை வழங்கிய வித்தகர் இ. வசந்தனும், ஒப்பனை செய்த திருமதி யோ. சண்முகநாதனும் பாராட்டுதற்குரியர். இவர்களின் பல்வேறு பங்களிப்புகளும் திருமதி ஆ. தர்சனனின் சிறந்த நட்டு வாங்கமும் ஒன்றிணைந்து நன்கு சோபித்தன. பிரமாதமாக விளங்கின. குருவின் ஆடலின் சாயல் மாணவியிலும் நன்கு புலப்பட்டது.

**சஹிர்தயன்**

# தென்பகுதி மாணாக்கர் வருகை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கியூடெக்கின் ஏற்பாட்டில் கொழும்பு சீதுவப் பாடசாலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் பார்வையிட்டதுடன் மாணவரகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

வடபகுதி பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்குகின்ற கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பாகவும் இவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

மாணவர்களின் எதிர்காலச் செயற்பாடுகள் சுதந்திரமாக இருக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தியதோடு வட, தென் பகுதி மாணவர்களுக்கு இடையில் கல்வித் தொடர்புகளை ஏற்படுத்தவும் முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. (உ-6)

# அதிபர்களுக்கு புலமைப் பரிசில்

(கொழும்பு)

பட்டதாரி அதிபர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில் வழங்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் 5 வருட சேவையை அதற்குரிய கொடுப்பனவுகளுடன் பூர்த்தி செய்தவர்களுக்கு இப்புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வட - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 85 பட்டதாரி அதிபர்கள் பயனடையவுள்ளனர்.

இதற்காக 400 பட்டதாரி அதிபர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும், இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடத்தப் படவுள்ளதாகவும் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார். (உ-3)

# கொத்தணி பஸ் நிறுவனங்களுக்கு 50 இலட்சத்திற்கு மேல் கடன்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன சுமார் ரூபா 50 லட்சத்திற்கும் மேலான பணத்தை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கொத்தணி பஸ் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டுமென சபையின் தலைவர் யு. எல். பரூட தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்திய சம்மேளனத்தின்போது பயன்படுத்தப்பட்ட பஸ்களுக்கான கட்டணமாக 35 லட்சம் ரூபாவும்,

இதே ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி நடத்திய மேதின நிகழ்விற்குப் பயன்படுத்திய பஸ்களுக்கான கட்டணமாக 18 லட்சம் ரூபாவும் இதுவரை வழங்கப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த இரு கட்சிகளும் செலுத்த வேண்டிய கடனை வசூலிக்கும் பொருட்டு நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளதாகவும்,

கொத்தணி நிறுவனங்களிடமிருந்து பஸ்களைப் பெற்றுக் கொடுத்த அரசியல் வாதிகளின் பெயர்ப்பட்டியல தமக்கு கிடைத்திருப்பதாகவும், இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற ஜன பல பேரணிக்கு பயன்படுத்திய பஸ்களுக்கான கட்டணங்கள் உரிய முறையில் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சபைத் தலைவர் யு. எல். பரூட் குறிப்பிட்டுள்ளார். (உ- 4)

# பேராசிரியர் பத்மநாதனுக்கு சம்பந்தன் விருது

(யாழ்ப்பாணம்)

இலக்கியக் கலாநிதி சி. பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வருடாவருடம் வழங்கப்பட்டுவரும் சம்பந்தன் விருது 2001ஆம் ஆண்டில் வெளிவந்த மிகச் சிறந்த நூலான பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய 'இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்' என்ற நூலிற்கு வழங்கப் பட்டுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், தெளிவத்தை யோசெப் ஆகியோர் கடந்த ஆண்டுகளில் சம்பந்தன் விருதினைப் பெற்றுள்ளார்கள்.

விருதுக்கான பணப் பரிசு 10 ஆயிரம் ரூபாவை வருடா வருடம் ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர் ' சம்பந்தனின் மகள் திருமதி கஜரோகனன் வழங்கி வருகின்றார்.

குறித்த ஆண்டில் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளால் ஆக்கப் பட்ட பல்துறை சார்ந்த நூல்களில் மிகச் சிறந்த படைப்புக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், இலக்கிய கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்), கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்), ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், திரு. இ. குமாரலிங்கம் ஆகியோர் விருதுக்கான தெரிவுக்குழுவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டிற்கான சம்பந்தர் விருதினைப் பெறும் பேராசிரியர் சி. பத்மநாதன் இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவர் என்பதுடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இளமானிப்பட்டத்தையும், லண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

நூறிற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பல ஆய்வு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்குகிறார். (உ)


## சிறுவர்களுக்கு ஓர் மகிழ்வான செய்தி!

சிறாராகிய உங்களுக்கு . . .

- மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்த
- சுய திறமைகளை ஊக்குவிக்க
- ஆக்கத் திறன்களுக்கு வாய்ப்பளிக்க
- சிறந்த தொடர்புகளை உருவாக்க

மாவட்ட சிறுவர் கழகம்
அமைக்கப்படுகிறது
District Child Club (DCC)



அங்கத்தவர்களாக விரும்புவோர் உங்கள் சுயவிபரங்களை 10.10.2002 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அஞ்சலிடவும்.

நீங்கள் 18 வயதிற்கு உட்பட்வர்களா? அப்படியாயின் அங்கத்தவராகலாம்.

ரீ.ரீ. மயூரன்
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30, யாழ் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.


செடெக் - கியூடெக் ஏற்பாட்டில்

# வடக்கு - தெற்குச் சிறார்கள் இணைந்து கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

செடெக், கியூடெக் நிறுவனங்களின் ஏற்பாட்டில் சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்பகுதிச் சிறுவர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இன்று வருகை தரவுள்ள இந்தச் சிறுவர்கள் வடபகுதிச் சிறுவர்களுடன சேர்ந்து சிறுவர்களின் உரிமை தொடர்பான கலை நிகழ்வுகளிலும், கருத்தரங்குகளிலும் பங்குபற்றவுள்ளனர்.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் சிறுவர் தினத்தன்று பல நிகழ்வுகளை இவர்கள் இணைந்து நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்கால சிறுவர்களின் கடமை, சமாதான சூழலில் சிறுவர்களின் உரிமை என்பன தொடர்பாக இந்நாட்களில் ஆராயப்படவுள்ளது. (உ- 6)

## உள்ளூராட்சித் தேர்தல் தள்ளிச் செல்கிறது!

# வேட்புமனுத் தாக்கல் செய்த அரச ஊழியர் விடுமுறை நீடிப்பில் ஊதியமின்றி பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் செய்த அரச ஊழியர்கள் விடுமுறையை பெற்றுள்ளதால் தங்களது கடமைகளை மீண்டும் தொடர முடியாமலும், சம்பளத்தை தப்பெற்றுக்கொள்வதிலும், சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

இம்மாதம் 25ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தத் தேர்தல் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட இருந்த அரச ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் சம்பளம் வழங்கப்பட வேண்டுமாயின்,

அமைச்சரவையில் விசேட பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிபெறப்பட வேண்டுமென தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெற விருந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே அதிகளவு அரசாங்க ஊழியர்களை வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், பிரதி அமைச்சருமான முகைதீன் அப்துல் காதர் கருத்து தெரிவிக்கையில்;

உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்மற்றும்ஏனைய கட்சிகள் சார்பிலும் அரசாங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் பலர் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள இவ்வேளையிலே, தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக, அவர்களுடைய சம்பளம் மற்றும் விடுமுறைகள் நீடிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இருப்பினும், தேர்தல் சட்டவிதிமுறைகளில் இச்சிக்கலைத்தீர்க்க குறித்த நேரடியான சட்டங்கள் எதுவும் இல்லாதகாரணத்தால், இவ்விடயத்தினை அமைச்சரவை மூலமே தீர்க்கமுடியும் எனவும், இது குறித்து வெகு விரைவாகமுடிவுஒன்று காணப்படும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழர் விடுதலைக்கழக வேட்பாளர்களுக்கும் இவ்வாறானதொருநிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் த. சித்தார்தன் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்டச் செயலகத்தினால் வெள்ளிதோறும் நல்லூர்நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற்பொழிவு தொடரில், இம்முறை 'சமயவாழ்வு' என்னும்விடயம்பற்றி பி.ப 5.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதிபேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதேவேளை, இவ்வாரம் முதல் வெள்ளிதோறும் பி ப 4 00 மணிக்கு இங்கு பண்ணிசை வகுப்பு நடத்தப்படவுள்ளது.

தேவார இசைமணி இரா. திருஞான சம்பந்தனால் நடத்தப்படவுள்ள இவ் வகுப்பில் தொடர்ந்துபங்கு கொள்ளும் மாணவர்களுக்கு வருட முடிவில் அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அண்மையில் முதலுதவி நிலையம்

(வவுனியா)

ஓமந்தை சோதனைச்சாவடியில் கடந்த வாரம் முதல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்முதலுதவிசிகிச்சை நிலையம் இயங்கத் தொடங்கியுள்ளது.

சோதனைச் சாவடி திறக்சப்பட்டுள்ள நேரத்தில் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் இங்கு கடமையில் இருப்பார்கள் என்றும்,

அண்மைக் காலங்களில்ஏ-9 வீதியில் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளதால் அதனைக் கருத்தில் கொண்டு இந்த முதலுதவி சிகிச்சை நிலையமானது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்அனுசரணையுடன் செயற்படுகின்றது என்றும் செஞ்சிலுவைச் சங்க தலைவர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார். (உ-3)

## மேலும் இரண்டு கொலரா நோயாளர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோய் என இனம் காணப்பட்ட மேலும் இருவர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இவர்களுடன் 23 வாந்திபேதி நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி நோயாளர் மூவர் இறந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து ஹரீம் பீரிஸ் கருத்து

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஐக்கிய தேசிய முன்னணி ஒழிக்கும் போது, நாட்டின் சகல தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து கருத்துக் கூறுகையில் ஹரீம் பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வத்தளைக் கிளை மகாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு தனது கட்சி பூரண ஆதரவளிக்கும் என தெரிவித்திருந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## கொழும்பில் டிஜிரல் ஊடகதொழில்நுட்ப நிலையம் திறப்பு

(கொழும்பு)

அதிநவீன டிஜிரல் ஊடக தொழில் நுட்பநிலையம் ஒன்று கொழும்பு பல்கலைக்கழக கணனிப்பாடசாலயில் நேற்றுமுன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் செச்சிரோ ஒட்சிசா இந் நிலையத்தினை உத்தியோக பூர்வமாக திறந்துவைத்தார்.

தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பனிதவளத்தை விருத்தி செய்து அதனூடாக கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலையின் கொள்ளளவு ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடனேயே இந்த டிஜிரல் ஊடக நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் 3ஆம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசீம்மற்றும் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பீ.கே.சமரநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (உ-10)

## நேரடிப்பேச்சு ஆரம்பமான 48மணி நேரத்தில்

# வட-கிழக்கு புனரமைப்புக்கு 100கோடி ரூபா சர்வதேச உதவி

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட 48 மணித்தியாலயங்களுக்குள் 100 கோடி ரூபாவை வட கிழக்கு அபிவிருத்திக்காக சர்வதேச நாடுகள் வழங்கியுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ 'சிலுமின்' பத்திரிகைக்குவழங்கிய பேட்டியில்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதானத்திற்கு எதிராகக் கோஷமிடுவோர் மிகச் சிலரேயாவர். மக்கள் நிதானமானவர்கள். மக்களின் ஒத்துழைப்பும் சர்வதேச சமூகங்களின் ஒத்துழைப்பும் நிச்சயம் நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

சமாதான முயற்சிகளில் அரசாங்கம் இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுகிறது.

பிரபாகரனுடன் நாம் நல்லெண்ணத்துடனான நட்புறவையே வளர்க்கிறோம்; அதுவே தனிநாடு என்ற கோரிக்கையை கைவிட வைத்துள்ளது. நம்பிக்கையோடு செயற்படுகிறோம் வெற்றி கிட்டுவது நிச்சயம் என நம்பிக்கை வெளியிட்டார்.

தொடர்ந்தும் தெரிவித்திருப்பதாவது.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்த நாளில் இருந்து பிரதானஎதிர்ப்பு நாடகத்தை அரங்கேற்றிவரும் ஜே வி.பி. யினருக்கு கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் ஆதரவு வெகுவாகக் குறைந்துள்ளமை தெளிவாகியது.

சமாதானத்திற்கான நடவடிக்கைகளுக்கு உலகின் பிரபல நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஐரோப்பிய யூனியன் அனைத்தும் பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருவதுடன், எதிர்காலத்திலும் சகல வழிகளிலும் உதவத் தயாராகவுள்ளன.

இன்றைய சமாதான முன்னெடுப்புக்களை நம்பிக்கையுடன் வரவேற்போம் என்று குறிப்பிட்டார். (உ)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக்சுற்றுப் போட்டியில் நாளை பி ப 4.00மணிக்குசென்அன்ரனிஸ் 'பி' வி க எதிர் பாரதி வி.கவும்,

பி.ப 5.15 மணிக்கு சென்றோக்ஸ் 'பி' வி.க எதிர்சென் மைக்கல்ஸ் வி.க ஆகியன பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## வதிவிடக் கருத்தரங்கு

(கோப்பாய்)

தீவக கல்வி வலய தரம் II, தரம் III பாடசாலை அதிபர்கட்கான 9 நாள் வதிவிடக் கருத்தரங்கு யாழ். மத்தியகல்லூரியில் கடந்த 17 ஆம்திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

முகாமைத்துவம், நிர்வாகம், சார்ந்த இக்கருத்தரங்குகள் வலிகாம வலயப் பாடசாலைஅதிபர்களுக்குஇருஅமர்வுகளும், யாழ். வலயப் பாடசாலைஅதிபர்களுக்குஒருஅமர்வும் ஏற்கனவே நடைபெற்றுள்ளதாகவும், ஏனைய வலயப் பாடசாலை அதிபர்கட்கு கட்டம் கட்டமாக இவ்வருட இறுதிக்குள் இக் கருத்தரங்கும், செயலமர்வும் நடத்தப்படவுள்ளதாகவும்இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-79)

## புதிய பங்குத் தந்தை

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை, உயரப்புலம் அடைக்கல நாயகி ஆலயம், நவாலி சென்பீற்றேர்ஸ் ஆலயம் மற்றும்நவாலிவடக்கு திருஇருதயநாதர் ஆலயம் பங்குகளில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இறைபணியாற்றிவந்த அருட்திரு. ஏ.பி. அன்ரனிப்பிள்ளை அடிகளார் சில்லாலை கதிரை மாதா ஆலயப் பங்கிற்கு மாற்றலாகிச் செல்வதால் அவரது இடத்திற்கு மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்திரு ஆர். எக்ஸ். நேசராஜா அடிகளார் நேற்று முன்தினம் முதல் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (உ-232)

## தேசிய விளையாட்டுப் போட்டி ஒத்திவைப்பு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டிற்கான, பாடசாலைகளிற்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

நாளை முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த தேசிய பாடசாலை விழா, மெய்வல்லுநர் விழா என்பன அத்திகதிகளில் நடைபெறமாட்டாதுஎனவும்,

இவ்விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிமுதல் 13 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மாவட்டம் தோறும் தொழில் காரியாலயம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொழில் காரியாலயங்கள் அமைக்கப்பட்டு வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் புதிய வேலைத் திட்டமொன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படும்.

தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பழைய வீதியிலுள்ள மாவட்டத் தொழில் காரியாலயத்தில் வீடமைப்பு கடனுதவி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரைமாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் வேலையற்று இருக்கின்றனர்; இவர்களுக்கான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை நாளை நடைபெறாது

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை நடைபெறாது எனவும் நாளை மறுதினம் 27 ஆம் திகதி திட்டமிட்டவாறு இடம்பெறும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ-6)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள்யா தொன்றும் இல்

குறள்

# வலம்புரி

## தடை மனு தாக்கல்

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரும் மனு ஒன்றை ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள ஜாதிக சங்கம் ஆகியன மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளன. இருபது வருடகால யுத்தத்தை நிறுத்தி சமாதான ஒளியைக் காட்டி நிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்க வேண்டுமென நீதி மன்றில் மனுத்தாக்கல் செய்யும் நிலைமை இப்போதும் நாட்டில் இருக்கின்றதென்பதை எண்ணும் போது,

இனவாதப்பேய் இலங்கையை விட்டு நீங்காது போல் தெரிகிறது. யுத்தத்தின் சுமையை நாடு தாங்கிக்கொள்ள முடியாதிருக்கும் போது மீண்டும் மீண்டும் யுத்தம் வேண்டுமென வாதிடுகின்றவர்களின் மனநிலை எத்தகையது என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும். கொடிய யுத்தம் தமிழர் தரப்பிலும், சிங்களவர் தரப்பிலும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி நிற்கும்போது, சமாதான ஒப்பந்தத்தை வெறுக்கும் கட்சிகளை நாட்டில் தடைசெய்வது குறித்து அரசு ஆலோசனை நடத்துமாக இருந்தால், அது வரவேற்கத் தக்கதாக இருக்கும். தமிழர்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்த விடுதலைப்புலிகளைத்தடை செய்த நாடுகள், சமாதானததை எதிர்த்து நிற்கும் ஜே.வி.பி,சிஹலஉறுமய போன்ற கட்சிகளின் விடயத்தில் மௌனமாக இருப்பதும் அந்நாடுகளின் ஒருபக்க சார்பைக் சுட்டி நிற்கிறது

இலங்கையின் அரசியல் எல்லைக்குள் சகல இனத்தவர்களும் சம உரிமையோடு வாழ்வதை அமெரிக்கா போன்ற நாடுகள் விரும்புமாயின், ஜே.வி.பி சிஹலஉறுமய போன்ற கட்சிகளின் இனவாதத் தீ குறித்து எதுவும் தெரியாததுபோல் இருப்பது அதிர்ச்சிக்குரியது.

எனினும் இனவாதக் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராகத் தாக்கல்செய்யத மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென சட்டமா அதிபர் தடை மனுத்தாக்கல் செய்திருப்பது ஆறுதல் தருவதாக உள்ளது.

# விருந்தோம்பல் பண்டைத்தமிழர் பண்பாடு

# உள்ளன்போடு உபசரித்துதவுதலே நல்விருந்து

இல்லறத்தைப் பேணி, ஒருமனைவியுடன் குடும்பம் நடத்துவதன் நோக்கமே விருந்தினர்களை வரவேற்று. உபசரித்து அவர்களுக்கு வாய்க்கு ருசியாக உணவளித்து மகிழ்விப்பதற்காகத் தான் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். செல்கின்ற விருந்தினர்களை அன்புடன் வழியனுப்பி விட்டு, வருகின்ற விருந்தினர்களை வரவேற்க முகமலர்ச்சியுடன் வழிமேல் விழிவைத்து ஆவலுடன் எதிர் பார்த்திருப்பவர்களை வானவர்கள் வரவேற்கக் காத்திருப்பார்களாம்.

### விருந்தோம்பல் நமது பண்பாடு

'விருந்து வந்துறும் போது என்னுறுமோ?என்று அசோகவனத்தில் உள்ள சீதை மனவேதனை அடைகிறாள், 'விருந்தெதிர்க் கோடலும் துறந்த' நிலைபற்றி கண்ணகி மதுரையில் கோவலனிடம் கூறிவருந்துகிறாள். விருந்து உபசரித்தல் நம்மவரின் பண்பாடு. தான் பட்டினி கிடந்தாலும் விருந்தாளிக்கு உணவளிக்கதமிழன் தயங்கியதில்லை. வயலில் விதைத்த நெல்லையும் அரித்துக் கொண்டு வந்து பஞ்சகாலத்தில் உலர்த்திக் குற்றி உணவளித்தநாயனாரின்கதைபெரிய புராணத்தில் உண்டு.

அந்தக்காலத்தில் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்ல சரியான வாகன வசதி கிடையாது. பெரும்பாலோர் நடந்தே பிரயாணம் செய்வர் நடந்து களைத்து நம்மைத் தேடி வந்தவரை களைப்புத் தீர உபசரித்து உணவளிக்க வேண்டியிருந்தது ஊர்களிலும், உணவு விடுதிகளும், தங்கும் இடங்களும் கிடையாது இருந்தாலும்ஒருசிலவே உண்டு. தேடிவந்த விருந்தினருக்குஉணவு தராவிட்டால் அவர் பட்டினி கிடக்க வேண்டும். இல்லா விட்டால் பிச்சை எடுக்க வேண்டும். ஆகவே, உணவுகொடுத்து தங்கவசதி செய்து கொடுப்பது அக்காலத்தில் மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்பட்டது.

பொ. ம. ராசமணி

### வசதிவாய்ப்புக்கள் உண்டு

தற்காலத்தில்எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போய் உடன் திரும்ப பஸ்வசதி உண்டு ரயில்வசதியும்உண்டு. உணவு விடுதிகள் இல்லாத ஊரே அபூர்வம் ஆகவே. விருந்து உபசரிப்பதற்கு முற்காலத்தைப் போல இக்காலத்திலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமா என்பது கேள்விக்குறியே ஆகும். சில குடும்பத்தாருக்கு அவர் குடும்பத்தில் உள்ளவர்களையே பேணுவது பெரும்பாடாக இருககும் போது விருந்தினர்களைப் பேணுவது அவ்வளவு எளிதானதல்ல. மாதச்சம்பளக்காரர்வீட்டிற்கு இருபத்திரண்டாம் தேதிக்குப் பிறகு எதிர் பாராத விதமாக நான்கைந்து விருந்தாளிகள் வந்து சேர்ந்தால், அவர் கடன் வாங்கிச் சமாளிக்க அனுபவிக்கும் தொல்லை கொஞ்ச,நஞ்சமா?

மாதச்சம்பளத்துக்காரர்கள் அந்தச் செலவிற்கு இவ்வளவு, இந்தச்செலவிற்கு இவ்வளவு என்று திட்டம் போட்டுப் பணம் ஒதுக்கி, வரவிற்குள் வாழ்க்கைச் செலவை அமைத்துக் கொண்டு நாளையும் பொழுதையும் கழித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஐந்தாறு விருந்தாளிகள் வந்து நான்கு நாட்கள் சேர்ந்தால் போல் தங்கிவிட்டால் குடும்பப் பொருளாதாரச் சீர் குலைவு ஏற்படாதா?

### விருந்தினர் கவனத்திற்கு

விருந்தினர்களே, தயவு செய்து முன்னறிவிப்பின்றி ஒரு வீட்டிற்குப் போகாதீர்கள இத்தனைபேர் வருகிறோம். இத்தனை நாள் தங்குகின்றோம் என்று குறிப்பிடுங்கள். நோயாளிகளை அழைத்துக்கொண்டு விருந்திற்குப் போவது நல்லதல்ல. நீங்கள் பல் விளக்கப்பயன்படுத்தும் பல்பொடி அந்த ஊரில் கிடையாதிருக்கலாம். நீங்கள் புகைக்கும் 'மார்க்சிகரெட் அங்கு இல்லாதிருக்கலாம். தயவு செய்துஅவற்றைவாங்கி 'ஸ்டாக்'செய்து கொண்டு பயணத்தைத் தொடருங்கள். துண்டு, சோப்பு, சீப்பு, மற்ற சில சில்லறைச் சாமான்களை உங்களுடன்எடுத்துக்கொண்டு போங்கள். போதிய ஆடைகளுடன் புறப்படுவது நல்லது.

ஏழை, எளியவர் வீட்டிற்குச் செல்லும் போது உங்கள் வீட்டிலுள்ளவசதிகளையும், சுவையான உணவினையும் அங்கு எதிர்பாராதீர்கள். நீங்கள் செல்லுகின்ற வீட்டிலுள்ளவர்களின் சில பழக்கவழக்கங்கள் உங்களுக்குப் பிடியாதிருக்கலாம். சகித்து போங்கள். அவ்வாறு சகிக்க உங்களால் இயலாதென்றால் விருந்திற்குப் போகாதீர்கள.

விருந்துக்குப் போவதன் மூலம் உங்களுக்கும் விருந்து கொடுப்பவருக்கும் நட்பு பலப்பட்டு வளர வேண்டுமேயல்லாது பகை வளரக் கூடாது. குழந்தைகள் உள்ள வீட்டிற்கு விருந்திற்குச்செல்லும்போது. ஏதாவது தின்பண்டம், வீட்டிலுள்ளவர்களுக்கு எளிய பரிசுக்கள் கொண்டு போங்கள். உங்கள் வயலில் விளைந்த பொருட்களில் கொஞ்சம் கொண்டு சென்றால் மிகவும் மகிழ்வார்கள். திருமணத்திற்குச் செல்லும் போது உங்களை மட்டிலும் தனிப்பட்ட முறையில் கவனிக்கவில்லையென்று குறை கூறாதீர்கள் பந்தியில் நீங்களே இடம் பிடித்துக் கொள்ளுங்கள். கிடைத்த இடத்தில் படுத்தோ, இருந்தோ ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். கல்யாண வீட்டில் அப்படிக் கவனிக்கவில்லை. இப்படிக் கவனிக்க வில்லை என்று புலம்பி உங்கள் தரத்தைத் தாழ்த்தி விடாதீர்கள்.

### உள்ளன்புடன் ஒருவார்த்தை

விருந்துக்குச் சென்ற இடத்தில் நீங்கள் ஆணானால் அங்குள்ள பெண்களோடு அளவோடு பழகுங்கள் பெண்ணானால் அங்குள்ள ஆண்களோடு ஒதுங்கி நின்று உரையாடுங்கள். நீங்கள் விருந்துக்கு வந்து போன பிறகு, விருந்தளித்த குடும்பத்தில் உங்கள் நடவடிக்கையை முன்னிட்டு சண்டை சச்சரவு வந்து விடக் கூடாது. தொற்று நோய் உள்ள போது விருந்திற்கு போய் நோயை விநியோகித்து விட்டு வராதீர், விருந்தளிப்பவர் வீட்டில் பேறு காலம் போன்றநிகழ்ச்சி நடந்திருந்தால் விரைவில் திரும்பிவிடுங்கள். தங்க வசதியில்லாத வீட்டில் இரவு தங்க வேண்டாம். முகமலர்ச்சியுடன் விடைபெற்று ஊர் திரும்பும் போது ஒரு வார்த்தை உங்கள் வீட்டிற்கு அவர்களையும் வருமாறு அழையுங்கள். விருந்தளிப்பவர்கள் உண்மையிலேயே நீங்கள் போகப் போகிறீர்கள் என்று வருந்தட்டும்.

# சமாதான முயற்சிகளை வலுவுள்ளதாக்க

# இந்தியாவின் பங்களிப்பு அத்தியாவசியமானது

## இந்தியன் எக்ஸ்பிரஸ் அபிப்பிராயம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு மேலும் உற்சாகத்தை அளிக்கவும், அதனைப் பலப்படுத்தவும் இந்தியாபொருளாதார, அரசியல் மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டியது அவசியம் என இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அவ் ஆசிரியத் தலையங்கத்தில் மேலும்,

தனிநாடு ஒன்றை ஏற்படுத்துவதற்காக தாங்கள் முயலவில்லை என்ற புலிகளின் அறிவிப்பு உற்சாகத்தை அளிக்கக் கூடிய மாற்றமாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் இந் நிலைப்பாடு மாற்றத்துடன், இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்கள அதிகரித்துள்ளன.

கருத்தொருமைப்பாடு, நாட்டைப் புனர் நிர்மாணம் செய்தல் ஆகிய இரு முக்கிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு கடினமான தொடர்ச்சியான முயற்சிகள் தேவை. அனைவரும் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

20 வருடகால உள்நாட்டு யுத்தத்தினால் இனங்களிற்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகாரணமாக மிக ஆழமான வடுக்கள் உண்டாகியுள்ளன. இவற்றை மிக அவதானமாககையாளவேண்டும்.

வெளிநாடுகளின் உதவியை பெற்றாலும் கருத்து வேறுபாடுகளிற்கான தீர்வுகள் இலங்கை சமூகத்திற்குள் ஏற்படுகின்ற மனமாற்றம் மூலம் ஏற்படவேண்டும்.

குறிப்பாக பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களிற்கிடையேயான உறவுகள் மாற்றமடைய வேண்டும்.

இதேவேளை, சமாதான முயற்சிகளின் வேகம் குறையாது பார்த்துக் கொள்ள வேண்டும் எனகுறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

### திணசரி தியானம்

### அன்பே கடவுள்

சூரியனிடம் உள்ள ஒளியும், சக்தியும், நீரின் சுகம் தரும் குளிர்ச்சியும், மலர்களது மகிழ்ச்சிதரும் மணமும், மலைகளின் கம்பீரமும், உணவுப்பொருள்களில் உள்ள உயிர்ச்சத்தும் இறைவனுடைய காட்சிகளே, இந்த அண்டத்தைப் படைத்து, அதை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிற மிகமேலான சக்திஇறைவனே அந்தசக்தி அன்பேயாகும். அன்பே கடவுள்.

சுவாமி சிவானந்தர்

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியில் அமைய அடிப்படையில் கடமைபுரிந்த கல்விசாரா ஊழியர்களுக்கு அடுத்தமாதம் முதலாம்திகதியிலிருந்து நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகபீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்தார். (உ-3)

## நேர்முகத் தேர்வு


(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரிகளில் 2003 ஆம் கல்வி ஆண்டிற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக ஒக்டோபர் மாதம் நடத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந் நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. (உ-3)

# புவியியல் ரீதியாகத் தீர்வு காண முற்பட்டால் சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேட்டி



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து தாம் பூரண திருப்தியடைந்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப்பேச்சு வார்த்தை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புவியியல் ரீதியான அலகுகளை முன் வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் இடைநடுவில் முறிந்து போய்விடும்.

புவியியல் ரீதியாக அதிகாரங்கள் தீர்மானிக்கப்படுவதில்லை இதனைக் கருத்தில் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதானப்பேச்சுவார்த்தை யாதார்த்த ரீதியில் முன்னெடுக்கப்படுவதால் அது திருப்தியளிக்கக் கூடியதாக உள்ளது.

அதேவேளை முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்கள் சார்பாக கலந்து கொள்வதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த)

## குருநகர் மீனவர்கள் மீது படையினர் தாக்குதல்

### தொழிலுக்கு செல்லாது பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீனவர்கள் நேற்று தொழிலுக்கு செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இப்பகுதி மீனவர்கள் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு தொழிலுக்கு செல்வதற்காக இராணுவத்தினரின் அனுமதிக்குக் காத்து நின்றபோது, இராணுவத்தினரின் தடுப்பு வேலியில், மீனவா ஒருவர் நித்திரைச் சோம்பலில் விழுந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் மீனவர்களைத் தாக்கியதுடன் கல்லுகளாலும் எறிந்து துரத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தினால் இரு மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இச்சம்பவம் குறித்து குருநகர் மீனவர் சங்கத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மீனவர் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை 6 மணிக்கு இராணுவத்தினர் மீனவர்களை தொழிலுக்குச் செல்லுமாறு அனுமதியளித்தனர்.

எனினும் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டி பகிஷ்ரிப்பில்ட ஈடுபட்டனர்.

(இ-ம)

## ஐ.சி.சி கிரிக்கெட் அரையிறுதிப்போட்டி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்று வரும் ஐ.சி.சி மினி உலகக் கிண்ணததிற்கான முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. பகல் இரவுப்போட்டியாக நடைபெறவுள்ள இன்றைய ஆட்டத்தில் இந்தியா அணியும் தென்னாபிரிக்கா அணியும் மேதுகின்றன.

(ந-5)

### கிழக்கிலிருந்து...

களுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் தகுந்த பாதுகாப்பை அளித்திருந்தது.

வாகனத் தொடரணி மூலம் வன்னி சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களை தென்னிலங்கை மக்கள் குழுமி நின்று ஆச்சரியத்துடன் பார்த்து கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

நேற்று வன்னி சென்ற 283 விடுதலைப்புலி உறுப்பினர்களில் 194பெண் உறுப்பினர்களும் 89 ஆண் உறுப்பினர்களும் அடங்குவர்.

வன்னி வந்தடைந்த புலி உறுப்பினர்கள் தியாதி லெப். கேணல் திலீபனின் 15வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகளிலும், கிளிநொச்சியில் 28, 29,30ம் திகதிகளில் இடம்பெறவுள்ள தமிழீழ பெண்கள் எழுச்சி நிகழ்வுகளிலும், லெப்டினன்ட் மாலதியின் 15வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகளிலும் கலந்து கொள்வுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### நெடுந்தீவில்...

னித்தனர்.

இந்நிலையில் கடற்படையினர் முகாம் அமைக்கும் பணியை இடை நிறுத்தி விட்டதாகத் தெரிவிக்கப்டுகிறது.

இதேவேளை கடற்படையினருடன் நெடுந்தீவில் கலந்துரையாடலில் ஈடுபட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழவினர் அவர்களிடம் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

நெடுந்தீவில் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்கவும் பொலிஸாருக்குப் பாதுகாப்பு வழங்கவுமே தாம் நெடுந்தீவிற்கு வந்தாக கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

(இ-250-43-5)

### ஒரு புறத்தில்...

அதிவேக தாக்குதல் டோறாப்படகுகளையும், போர்க்கப்பல்களையும கொள்வனவு செய்வதிலும் அரசு அக்கறை காட்டி வருவதுடன் இராணுவத்தினருக்குப் புதிதாக ஐயாயிரம் பேரைத் திரட்டவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் அதேவேளை இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருப்பது சமாதான முயற்சிகளில் குந்தகத்தை ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

### தலைவர்...

களின் பிரச்சினை தொடர்பாக உரிய நேரத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தலைவர் பிரபாகரன் உறுதியளித்ததாக அமைச்சர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை காரணமாக மலையகத்தில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்துள்ள தமிழ் அகதிகளை அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். (த)

### அல்லைப்பிட்டி...

அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் அவர்களை நீண்ட நேரம் தடுத்து நிறுத்திப் பயணத்தைத் தொடர அனுமதிக்காது அலட்சியமாகக் கடற்படையினர் செயற்பட்டனர்.

இவ்வேளையில் அவ்வீதியால் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்ஸில் பயணம் செய்த பொது மக்கள் நிலைமையை அவதானித்து சோதனைச் சாவடியில் தரித்து நின்ற விடுதலைப்புலிகளின் வாகனத்தை வீதித்தடையையும் மீறி வாகனத்தைத் தள்ளி போராளிகளை அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர்.

கடற்படையினரின் நடவடிக்கையால் விசனம் அடைந்த பொதுமக்கள் கோபாவேசத்துடன் சோதனைச் சாவடியை தாக்க முறபட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப்புலி உறுப்பினர்களை கடற்படையினர் வேண்டுமென்று திட்டமிட்டுச் சீண்டிப் பார்ப்பதுடன் புலிகளின் பொறுப்பாளர்களை அவமானப்படுத்தும் இத்தகைய சம்பவங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல்கள் என விடுதலைப்புலிகள் போர் நிறுத்தக் கண்காணிபுக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். (இ)

### 24 மணி...

அதன் பின்னர் ஒருவார காலத்திற்குள் ஏ-9 வீதியை 24மணி நேரப் போக்குவரத்திற்கு திறந்து விடுவதென்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார். (த-43)


பட்டுப் போனாலும் - பனை
நட்டம் தராது



## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல் - 2002

2002 ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30.09.2002 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் | -15% |
| ஏனைய காணிகள் | -20% |

நிலுவை உட்பட 2002 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறித்த நிலுவையைச் செலுத்தாத பட்சத்தில் மாநகரசபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு X11, 252 (1) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாக செலுத்துவோர் "மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்" என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

[C/5027]



## இவரைத்தெரியுமா?



R.ஜீவா

கந்தர்மடத்தைச் சேர்ந்த இவர் புதுவை லோசனிடம் பெயின்ரர் வேலை செய்தவர். பெயர் R.ஜீவா, முதலில் சாவகச்சேரியிலும் பின்பு கட்டுடை மானிப்பாயிலும் வசித்தவர். தலைமயிரில் சாடையான வெள்ளை முடி உள்ளது. இந்தியாவில் விவாகம் செய்தவர். இவரைத் தெரிந்தவர்கள் 72 பழம் வீதி, கந்தர்மடம் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T-P. 2222661
2222046

கு. கங்கைவேணியம்
வேணி களஞ்சியம்.

[5292]



## அரசாங்க
## கேள்விப் பத்திர அறிவித்தல்
### யாழ் மாவட்ட செயலகம்

மேற்படி மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்திற்கு பின்வரும் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றை விநியோகிப்பதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது.

இவை தொடர்பான பூரண விபரங்களையும் விண்ணப்ப படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ரூபா 10,000/= ஐ மீளளிக்ககூடிய வைப்புச் செய்து உடன்படிக்கையிலும் கைச்சாத்திட வேண்டும்.

விண்ணப்பங்களை அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "தளபாட உபகரணங்களிற்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2002.10.16ஆந் திகதி பி.ப 2.30 மணிக்கு முன் எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விப் பத்திர பெட்டி திறக்கப்படும். அப்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

### பொருட்கள் விபரம்:

1. கணனித் தொகுதி
2. கணனிப்பதி கருவி (Printer)
3. தாங்கி மின்விசிறி (Stand Fan)
4. மரத் தளபாடங்கள்
   அ) கைபிடிக் கதிரை
   ஆ) தட்டச்சாளர் கதிரை(Typist Chair)
5. உருக்குத் தளபாடங்கள்
   அ) அலுமாரி
   ஆ) கோவை அலுமாரி
   இ) அலுவலக மேசை
   ஈ.) தட்டச்சாளர் மேசை(Typist Table)
6. துவிச்சக்கர வண்டி - லுமாலா
7. தட்டச்சு இயந்திரம் (18") ஒலிம்பியா (தமிழ்)

க.சண்முகநாதன்,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
யாழ்மாவட்டம்.

[C/5026]


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.